GOKULAM

ஜூலை 2008 ♦ விலை ரூ.8/- ♦ 80 பக்கங்கள்

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


551


552


553


554


555


556


557



558


559


560


561


562


563


564


565


566



567


568


569


570


571


572


573


574


575

தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்

கோகுலம்

கல்கி

ஜூலை 2008 மலர் : 26 இதழ் : 6

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
– பாரதியார்

காய்கனிகள், பெட்ரோல் - டீசல், சமையல் கியாஸ் விலை அதிகரிப்பு, பண வீக்கம், அரசைக் கண்டித்துப் போராட்டம், பந்த்...

சமீபகாலமாக இதுபோன்ற செய்திகளை நீங்கள் தொலைக்காட்சி, செய்தித்தாள் மூலமாக அறிந்திருப்பீர்கள். வீட்டிலும் பெரியவர்கள் இது குறித்து பேசிக்கொள்வதைப் பார்த்திருப்பீர்கள். 'இதெல்லாம் பெரிவங்க விஷயம், நம்ம வேலை படிக்கறது தானே' என நினைக்கலாம். அதில் தவறில்லை, உங்கள் கவனம் படிப்பில் இருக்க வேண்டியது அவசியமே. அதேசமயம் இந்தப் பிரச்னையில் உங்கள் பங்களிப்பையும் கொடுக்கலாம்.



வீட்டுக்கும் நாட்டுக்கும் உதவி!

பெற்றவர்கள் உங்களுக்கு தரும் 'பாக்கெட் மணி'யில் மிச்சம் பிடித்து சேமிக்கலாம். அந்தப் பணத்தில் நோட்டுப் புத்தகம், பேனா, பென்சில் போன்றவற்றை வாங்கலாம். இதனால் பெற்றவர்களின் சுமை சற்றே குறையும். அவர்களுக்கும் உங்களை நினைத்துப் பெருமையாக இருக்கும். அநாவசியமான செலவினைத் தவிர்ப்பது வீட்டுக்கு மட்டுமல்ல, நாட்டின் பொருளாதாரத்துக்கும் செய்யும் உதவியாக இருக்கும். என்ன, செய்வீர்கள்தானே?

அன்புடன்
கோகு

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி
உதவி ஆசிரியர் :
ஆரணி யுவராஜ்
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்
தொலைபேசி :
044 - 4343 8888
(30 lines)
தொலைநகல் :
044 - 4343 8899
மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ. **1000/-**

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

சுமங்கைகளின் சுகாகலம்!



ராமு ஐந்தாம் வகுப்பு மாணவன். படிப்பில் படு கெட்டி. எதையாவது ஆராய்ச்சி செய்துகொண்டே இருப்பான். அவனுடைய ஆசை, ஒரு நல்ல விஞ்ஞானி ஆவது.

ஒரு நாள் மினி என்ற மின்மினி பூச்சி, ராமு வீட்டின் மூலையில் வந்து தங்கியது. 'பூச்சிகளின் உலகில் தானே பேரழகி' என்று நினைத்தது. அதனால், மற்ற பூச்சிகளை மட்டம் தட்டியது.

ஒரு மாலைப்பொழுது.

சிண்டு என்ற எறும்பு, அதே இடத்துக்குப் புதிதாக வந்து சேர்ந்தது. அது மிகவும் சுறுசுறுப்பாக மழைக் காலத்துக்குத் தேவையான உணவுப் பொருளைச் சேகரித்தது.

மினியும், வழக்கம்போல் அதை வம்புக்கிழுத்தது.

"ஏய்! சின்னப் பயலே! யார் நீ புதுசா இருக்க?" என்று கேட்டது.

சிண்டு பவ்யமாக, "என் பெயர் சிண்டு. நான் மழைக் காலத்துக்காக உணவு சேகரிக்க வந்திருக்கிறேன் அக்கா" என்றது.

உடனே "என்னது அக்கா...வா? என்னைப் பார்த்தா அக்கா மாதிரி தெரியுதா? என் அழகையும் வயசையும் கேவலப்படுத்தறியா நீ? என் பெயர் மினி. அப்படியே கூப்பிடு! ஆமா, நீ ஏன் இவ்வளவு கறுப்பா, அசிங்கமா இருக்க? என்னைப் பார்த்தியா? எவ்வளவு அழகா, ஒளிவீசிகிட்டு, எல்லாரையும் அட்ராக்ட் பண்றேன். நீ ஃபேர் அண்ட் லவ்லியெல்லாம் யூஸ் பண்ணமாட்டியா?" என்றது.

"ஆமா மினி, நீ அழகுதான். ஆனால்,

உனக்கு இந்த ஒளி அழகுப்போல் எனக்கு என் சுறுசுறுப்பு அழகு. இதுகூட நான் சொல்லவில்லை. ஆனானப்பட்ட மனிதனே ஒப்புக்கொண்டான்'' என்றது.

''என்ன சொன்னாலும் நீ அசிங்கம்தான், நான் அழகுதான். எனக்கு பியூட்டி பார்லருக்கு நேரமாச்சு. நான் கிளம்பறேன். பை! பை!'' என்று கிளம்பியது.

சிண்டு எதுவும் பேசாமல் மினியிடமிருந்து விலகியது.

ஆங்! நாம ஒரு ஆளை மறந்தே போய்ட்டோம்ல! வாங்க, ராமு என்ன பண்றான்னு பார்ப்போம்!

வீட்டில், கரண்ட் கட்!

ராமு, அப்பதான் விளையாடிட்டு வந்தான். அப்போது ''ஹே! இங்க பாரு மம்மி, ஒரு க்ளோ வொர்ம்! ஹையா ஜாலி! இத வச்சு நிறைய ரிசர்ச் பண்ணப் போறேன்'' என்றபடியே ஒரு கண்ணாடிக் குடுவையினுள் அதை அடைத்தான்.

அது யார் என்று நினைக்கிறீர்கள்? யா! மினியேதான்!

ஏதோ கெமிக்கலை அதன் மேல் ஊற்றப் போனான். மினி, ''காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!'' என்று அலறியது. ஆனால் யாரும் கண்டுகொள்ளவில்லை.

சிண்டு காதுக்கு அதன் அலறல் கேட்டது.

சிண்டு வேகமாக வந்து ராமுவின் காலை நறுக்கென்று கடித்தது. ராமு எதிர்பார்க்காததால் கண்ணாடிக் குடுவையை, கீழே போட்டு உடைத்துவிட்டான். அங்கிருந்து 'தப்பித்தோம். பிழைத்தோம்' என்று மினி பறந்து ஒளிந்து கொண்டது.

ராமு அதையெல்லாம் எடுத்துப் போட்டுவிட்டுப் போனபிறகு, மினி வெளியே வந்து, சிண்டுவிடம் கண்ணீர் மல்க கூறியது.

''நண்பா! தயவுசெய்து என்னை மன்னித்துவிடு. என்னோட இந்த அழகான ஒளிதான் என்னை இருட்டில் காட்டிக் கொடுத்தது. எனது இந்த அழகே எனக்கு ஆபத்தாகிவிட்டது. உன்னை அவ்வளவு கேவலப்படுத்தின பிறகும், எனக்காக நீ செய்த உதவியை மறக்கமாட்டேன். என்னை மன்னிப்பாயா நண்பா?'' என்றது.

''ஏன் இப்படியெல்லாம் சொல்ற? நான் அதை அப்பவே மறந்துட்டேன்'' என்றது.

ஒளிரும் மினி!



சிண்டுவும், மினியும் அதன்பிறகு பெஸ்ட் ஃப்ரண்ட்ஸ் ஆனார்கள் என்று சொல்லவும் வேண்டுமா?

– எஸ். அனுசத்யா, பத்தாம் வகுப்பு, உறுப்பினர் எண் : 56, சென்னை

முனைவர் ஆசுரா



எங்கள் செல்ல

மிக்கிமவுஸ், சூப்பர்மேன், ஸ்பைடர்மேன், பேட்மேன் கதை மாந்தர்கள் குழந்தைகளை மட்டுமல்ல பெரியோரையும் கவர்ந்தவை. இப்போது இவர்களையெல்லாம் முந்திக்கொண்டு ரேஸில் ஓடிக்கொண்டிருக்கிறாள் ஒரு குட்டிப் பெண். அவள்தான் டோரா!



யார் இந்த டோரா?

துள்ளித் திரியும் பள்ளிச் சிறுமி டோரா. ஒரு அப்பா தன் மகனைப் பள்ளிக் கூடத்தில் சேர்க்க விரும்பினார். மகனிடம், "நீ எந்த ஸ்கூலுக்குப் போறே?" எனக் கேட்டார். அதற்கு அவன், "நான் டோரா ஸ்கூலுக்குப் போறேன்" என்றான். இப்படி இலட்சக்கணக்கான சம்பவங்கள் டோராவை உலகப் புகழ்பெற்ற கதா பாத்திரமாக மாற்றிக்கொண்டிருக்கிறது.

குழந்தைகளின் பெஸ்ட் ஃப்ரண்டாக மாறியிருக்கும் டோராவுக்கு வட்ட முகம்.

அழகான கண்கள், பேபி கிராப் கட்டிங், முதுகில் ஸ்கூல் பேக். அமெரிக்காவில் பிறந்த டோராவை அற்புதமாக வடிவமைத்தவர்கள் **கிரீஸ் கி.ஃபோர்டு, வேலரி வால்ஷ், எரிக் வீனர்** என்போர். டோரா முதன் முதலாகச் சோதனை முயற்சியாக வெளியிடப்பட்டது 1999ஆம் ஆண்டில். 'டோரா த எக்ஸ்புளோரர்' என்ற பெயரில் வெளியானது.

'நிக்கல்டான்' என்ற சேனல் டோராவை ஆகஸ்ட் 14, 2000ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வெளியிடத் தொடங்கியது. டோராவில் வருகின்ற மனம் மயக்கும் இசையை வழங்கியவர் பில்லி ஸ்ராஸ். ஆசிரியர் குழு : கெய்ல் மெக்இன்ட்ரே, கரீன் பின்லே போவெல், டேவிட் விக்போர்ஸ் போன்றோர். குட்டிகளை வெகுவாகக் கவர்ந்த இந்த டோரா, வர்த்தக ரீதியாக மிகப் பெரிய வெற்றியைச் சந்தித்திருக்கிறது. 2004ஆம் ஆண்டில் மட்டும் 1 பில்லியன் டாலர்களைச் சம்பாதித்துள்ளது.



டோரா!

டோராவின் தோழர்கள்

'டோராவின் பயணங்கள்' தொடரில், டோரா எதையாவது கண்டுபிடிக்கச் செல்வாள், அல்லது பிறருக்கு உதவுவதற்காகச் செல்வாள். அவளுக்கு வழிகாட்ட உதவுவது 'மேப்' என்னும் வரைபடம். எப்போதும் உடன் இருக்கும் குரங்குத் தோழன் 'புஜ்ஜி' (ஆங்கிலத்தில் இந்தக் கதாபாத்திரத்தின் பெயர் 'பூட்ஸ்').



டோரா நடந்து போகும்போது, புஜ்ஜி பல்டி அடித்துக்கொண்டு உற்சாகமாக வரும். பொதுவாக நமது குழந்தைகள் இந்த நிகழ்ச்சியை 'டோரா-புஜ்ஜி' என்றே அழைக்கின்றனர். இந்த புஜ்ஜி சாம்பல் நிறம் கொண்டது. புஜ்ஜியின் அம்மா, அப்பா டோராவுக்கு அவ்வப்போது ஆலோசனைகள் வழங்குவர்.

டோரா, புஜ்ஜியைத் தொடர்ந்து அடுத்ததாக இடம்பெறும் முக்கியமான கேரக்டர் 'குள்ளநரி'. ஆங்கிலத்தில் இதை 'ஸ்வைபர்' என அழைக்கின்றனர். ஒவ்வொரு முறையும் இந்தக் குள்ளநரி திருட முயற்சிக்கும். அப்போது, டோராவின் முயற்சியால் தடுக்கப்படும். டோரா ஒவ்வொரு முறை வெற்றிபெறும்போதும். அதைக் கொண்டாடும் விதமாக இசைக் கருவிகளை இசைக்கும் ஒரு குழு உண்டு. அதுதான் 'பீஸ்டா டிரைபோ'. இதில் ஒரு வெட்டுக்கிளி, நத்தை, தவளை ஆகியன இடம் பெற்றுள்ளன.



டோராவுடன் எப்போதும் இணைந்திருப்பது, அவள் முதுகில் சுமந்து கொண்டிருக்கும் பை. டோராவுக்குத் தேவையான கருவிகள் இந்தப் பையில் இருக்கும். இதிலிருந்து டோரா தனக்குத் தேவையான பொருட்களை எடுத்துக்கொள்வாள்.

டோராவோடு இணைந்திருக்கும் கதாபாத்திரங்கள் : டோராவின் அப்பா பாபி, அம்மா மாமி, பாட்டி அபியூலா உறவினர்கள் டியூகோ, டெய்சி மற்றும் அலிஸியா, இரட்டைச் சகோதர, சகோதரி, ஆசிரியர், இசை ஆசிரியர், மன்னர் பாபோ, சாண்டா கிளாஸ், தவிர நிறைய விலங்கு கதாபாத்திரங்களும் டோராவின் பயணத்தில் இடம்பெறும்.



டோராவின் சிறப்புகள்

டோராவின் சிறப்பு அம்சம் என்னவென்றால், பார்க்கும் குழந்தைகளையும் பங்கெடுக்க வைப்பதுதான்.

''எங்கே நாம போறோம்?''

'எரிமலைக்குப் போறோம்.''

''எங்கே நாம போறோம்?''

''எரிமலைக்குப் போறோம்.''

டோராவின் கேள்விக்கு, வீட்டில் இருந்து நிகழ்ச்சி பார்க்கும் குழந்தைகள் பதில் சொல்கின்றனர்.

''எங்களுக்கு நீங்க உதவுறீங்களா?'' என்னும் டோராவின் பேச்சில் வசீகரம் அதிகம்!

''முயற்சி செய்தால் சாதிக்கலாம்'' என டோரா உச்சரிக்கும் ஒவ்வொரு வார்த்தைகளும் குழந்தைகளுக்கு மனப்பாடம் ஆகிவிட்டன.

''குள்ளநரி திருடக் கூடாது

உலக மொழிகளில் டோரா...

டோராவின் பயணங்கள் தற்பொழுது உலகையே கலக்கிக் கொண்டிருக்கிறது. ஆங்கிலம், தமிழ் உட்பட இருபதுக்கும் மேற்பட்ட மொழி பேசி அசத்திக்கொண்டிருக்கிறாள் டோரா.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற நாற்பதுக்கும் மேற்பட்ட டோரா கதைப் புத்தகங்கள் வெளிவந்துள்ளன.

உலக அளவில் எந்த விஷயம் மக்களைக் கவர்ந்தாலும், உடனே அதை வியாபாரப் பொருட்களாக மாற்றிச் சந்தைக்குக் கொண்டு வருவது வியாபாரிகள் வேலை. குழந்தைகளின் கனவு நாயகி டோரா, கைக்குட்டை, ஸ்கூல் பேக், வாட்டர் பாட்டில் என அனைத்திலும் இடம் பிடித்துவிட்டாள்.



டோரா-புஜ்ஜி படம் போட்ட தின்பண்டங்கள் நிறைய கடைகளில் விற்பனையாகத் தொடங்கியுள்ளன. இந்தப் படங்களுக்காகவே குழந்தைகள் இந்தத் தின்பண்டங்களை வாங்கி உண்கின்றனர். டோரா-புஜ்ஜி ஸ்டிக்கர்கள், பள்ளி மாணவ-மாணவியரின் நோட்டுப் புத்தகங்களில் இடம்பெற்றுள்ளன. படங்களைச் சேகரிக்கும் பழக்கமும் மாணவர்கள் மத்தியில் வளர்ந்துள்ளது!

"முயற்சி செய்தால் சாதிக்கலாம்" என டோரா உச்சரிக்கும் ஒவ்வொரு வார்த்தைகளும் குழந்தைகளுக்கு மனப்பாடம் ஆகிவிட்டன.



● டோராவை ரசிக்கும் குட்டீஸ் : அக்ஷயா, சதீஷ், அருண், படம் : ஸ்ரீஹரி

குள்ளநரி திருடக் கூடாது" என டோரா சொல்லும் வார்த்தைகள், வீட்டுக் குழந்தைகளையும் பேச வைக்கின்றன.

"நீங்க இல்லைன்னா, இவ்வளவு பெரிய விஷயத்தை எங்களால் சாதித்திருக்க முடியாது. தேங்க்ஸ்" எனக் குழந்தைகளுக்கு டோரா நன்றி சொல்வாள்.

பயணத்தின் முடிவில், "ஜெயிச்சுட்டோம்! ஜெயிச்சுட்டோம்!" என டோரா-புஜ்ஜி போடும் ஆட்டம், வீட்டில் குழந்தைகளையும் ஆட வைக்கிறது.

'டோராவின் பயணங்கள்', வெறும் பொழுதுபோக்காக மட்டுமில்லாமல் குழந்தைகள் மத்தியில் அன்பு, தன்னம்பிக்கை, நட்பு, உதவி செய்தல், விடாமுயற்சி, ஒற்றுமை, மரியாதை, ஒழுக்கம் போன்ற பண்புகளை வளர்க்க உதவி செய்கிறது.



ஹாய் குட்டீஸ்! எங்களுக்கு வண்ணம் தீட்டுங்க!





நிழல் திருடன்!

கதை : பி.எஸ். ஜேம்ஸ்
படம் : ராம்கி




இரண்டும் வீட்டுக்குள் சென்றன. நரி, எலியை உபசரித்தது. அப்போது வாசலில் -
நரியண்ணே! நரியண்ணே!
யாரது?
நான்தான் அடுத்த வீட்டு ஓநாய். நான் பக்கத்து காடு வரைக்கும் போய்ட்டு வரேன். என் வீட்டைக் கொஞ்சம் பார்த்துக்குங்க.
சரி! சரி!
ஓநாய் சென்றதும் -
இவனுக்கு வேற வேலையே இல்லை. ஒருமுறை என்கிட்டே சண்டை போட்டான். இப்ப குலாவுறான்!
சரி விடு நண்பா, சின்னப் பயல்!
நரியும் எலியும் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தன. பிறகு வீட்டுக்கு வெளியே வந்தன.
ஆ! நண்பா! இங்கே பாரேன், என்னோட நிழல் பாதியா குறைஞ்சுடுச்சு.
ஆமா! எப்படி?



இது அந்த ஓநாயோட வேலையாதான் இருக்கும். அவன்தான் என் பாதி நிழலைத் திருடிட்டான்.
இதைச் சும்மா விடக்கூடாது. வா, ராஜாகிட்டே சொல்வோம்.
சிங்கராஜாவின் வீட்டில்
ஆமாம் ராஜா! என் நண்பன் சொன்னது உண்மை. ஓநாய் நைசா பேசி, நிழலைத் திருடிட்டுப் போயிடுச்சு.
நீங்க ரெண்டு பேரும் நாளைக்கு காலையில வாங்க. ஓநாயையும் வரச் சொல்லி விசாரிக்கிறேன்.
நன்றி ராஜா!
இரண்டும் புறப்பட்டுச் சென்றன.
மறுநாள் காலை
ராஜா, நரி சொல்வது பொய்! இதன் நிழலை நான் திருடவில்லை. வேண்டுமானால் சோதித்துப் பாருங்கள்.
எப்படிக் கண்டுபிடிக்கறது?


மந்திரி புலியின் யோசனை -
வெளியே சென்று பார்த்தால் தெரியும்.
அப்படியே செய்வோம்!
வெளியே வந்த நரிக்கு அதிர்ச்சி!
ஆ! பழையபடி இருக்கே! இதுவும் ஓநாயின் சதிதான். உங்களுக்குப் பயந்து ரகசியமாக வைத்து விட்டது.
ஆமா! ஆமா!
சிங்கராஜாவுக்கு கோபம் -
நான் என்ன வேலை வெட்டி இல்லாமல் இருக்கேனா? என் நேரத்தை வீணாக்கிட்டீங்க. ஓடிடுங்க! இல்லேன்னா சிறையில் அடைச் சுடுவேன்.
ஐயோ! வேண்டாம். வா, நண்பா ஓடிடலாம்!
நரியும் எலியும் ஓட்டமெடுத்தன.

தென்தமிழகத்தின் ஆக்ஸ்போர்டு என்றழைக்கப்படும் பாளையங்கோட்டையில் கடந்த சில வருடங்களாகவே எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ் 2 தேர்வுகளில் மாநில அளவிலான வெற்றி என்பது மிகவும் அரிதான விஷயம். ஆனால் இந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் மாநிலத்தின் முதல் மூன்று இடங்களையும் பெற்று பெருமை சேர்த்துள்ளனர் நெல்லை மாணவ, மாணவிகள்.

'முதல்வர்கள்' சந்திப்பு

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுகளில் முதல் மூன்று இடங்களை ஒரே மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் பெறுவது இதுவே முதன்முறை. அதேபோல் 500க்கு 496 மதிப்பெண்கள் பெறுவதும் எஸ்.எஸ்.எல்.சி. வரலாற்றில் முதன்முறை. முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவர்



"அப்பாதான்

களையும், பெற்றோர்களையும் ஒரே இடத்தில் சந்தித்தோம்.

"அன்னைக்கு ரிசல்ட்டுங்கறதால காலை 8.30 மணிக்கு கோயிலுக்குப் போயிட்டு வீட்டுக்கு வந்தேன். வழியில பக்கத்து வீட்டு ஆன்ட்டி, 'நீ ஸ்டேட் ஃபர்ஸ்ட் வாங்கியிருக்க'னு சொன்னாங்க. முதல்ல என்னால நம்பவே முடியலே. ஆனா அடுத்த அரை மணி நேரத்துல வீட்டுக்கு ரிப்போர்ட்டர்ஸ், ஃபோட்டோஃகிராபர்ஸ் நிறைய பேர் வந்தாங்க. ரொம்பவே சந்தோஷமா இருந்துச்சு" என்கிற ராம் அம்பிகை மாநிலத்தின் முதல் மாணவி. அம்பிகையும், மாநிலத்தில் மூன்றாம் இடம் எடுத்த ரமாசுவாதிகாவும் வகுப்புத் தோழிகள்.

சகீனாவும், ஜோசப் ஸ்டாலினும் 494 மதிப்பெண்களுடன் இரண்டாம் இடத்தைப் பகிர்ந்துகொண்டனர். "ஆசிரியர்கள் கொடுத்த ஊக்கத்தாலும், பெற்றோர்களின் ஒத்துழைப்பாலும் மட்டுமே இந்த வெற்றி சாத்தியமானது. எங்க ஸ்கூல்ல சுமாரா படிக்கிற மாணவிகளுக்கு ஸ்பெஷல் கிளாஸ் வைப்பாங்க. எனக்கும் அவர்களோடு ஸ்பெஷல் கிளாஸ் வெச்சாங்க. அப்பாதான் தினமும் சாயந்தரம் எட்டு மணிக்கு ஸ்கூட்டர்ல வீட்டுக்குக் கூட்டிட்டுப் போவாங்க. நியாயமா இந்த வெற்றி என்னோடப் பெத்தவங்களுக்குதான்" என்று தன் அம்மாவின் தோள் சாய்ந்து சொல்கிறார் சகீனா.

மாநிலத்தில் இரண்டாம் இடம் எடுத்த மற்றொரு மாணவரான ஜோசப் ஸ்டாலின் 'படிப்பில் எப்படி?' என்று அம்மாவிடம் கேட்டால், சற்று நேர அமைதிக்குப் பிறகு "உண்மையச் சொல்லணும்னா, அவன் மத்தவங்க மாதிரி விழுந்து விழுந்து படிக்கிற ஆள் கிடையாது. பரீட்சை நேரத்துலயும் ஃப்ரண்ட்ஸ் விளையாட கூப்பிட்டாங்

கன்னா ஓடிப் போயிடுவான். ஆனா ஸ்கூல்ல பாடம் நடத்தும்போதே கூர்ந்து கவனிச்சுடுவான். ஏதாவது சந்தேகம்னா உடனே டீச்சர்கிட்ட கேட்டு கிளியர் பண்ணிப்பான். அவன், அப்பாவும் கணக்கு நல்லா போடுவாரு. கணக்குல எந்த டவுட் வந்தாலும் அவன் அப்பாகிட்டதான் கேட்டுத் தெரிஞ்சுக்குவான். அவனுக்கு அப்பாதான் முதல் குரு'' என்றபடியே செல்லமாய் மகனை, தோள் தட்டிப் பாராட்டுகிறார் ஜோசப்பின் தாய் ராணி.

''ரிசல்ட் அனோன்ஸ் பண்ணும்போது எனக்கு ஸ்டேட் ஃபஸ்ட் கிடைக்காதது வருத்தமா இருந்துச்சு. ஆனா என் ஃப்ரெண்ட்தான் ஸ்டேட் ஃபஸ்ட்னு தெரிஞ்சதும் ரொம்ப சந்தோஷப்பட்டேன். நான் ஸ்டேட் தேர்டு வாங்கின விஷயமே ரொம்ப நேரம் கழிச்சுதான் தெரிஞ்சுது. நான் வருங்காலத்துல டாக்டராக ஆசை. டாக்டரானாதான் சுயமா சம்பாதிக்கவும் முடியும், நாலு பேருக்கு நல்லது செய்யற திருப்தியும் இருக்கும்'' என்கிறார் ரமா சுவாதிகா.

"டாக்டரானாதான் சுயமா சம்பாதிக்கவும் முடியும், நாலு பேருக்கு நல்லது செய்யற திருப்தியும் இருக்கும்"

வெற்றிபெற்ற நான்கு மாணவர்களுமே சராசரி வருமானம் கொண்ட குடும்பப் பின்னணியில் இருந்து வந்தவர்கள். சென்னை போன்ற பெருநகரங்களில் கோச்சிங் கிளாஸ், ஸ்பெஷல் டியூசன் என பல வசதி உண்டு. அந்த மாதிரி எந்த வசதியும் இல்லாமல், இவர்கள் பெற்ற இந்த வெற்றி பலரையும் வியப்பில் ஆழ்த்துகிறது.



✱ சகீனா, ஜோசப் ஸ்டாலின், ராம் அம்பிகா, ரமா சுவாதிகா


முதல் குரு!"

பேட்டி, படம் :

அருண்கதாதரன்

தலைவர்கள்

இந்தியாவின் பழம்பெருமை வாய்ந்த மாநிலங்களில் மிகவும் முக்கியமானது உத்தரப்பிரதேசம். நாட்டின் மிக அதிகமான மக்கள்தொகை கொண்ட மாநிலமாகவும் விளங்குகிறது. மொத்தம் எழுபது மாவட்டங்கள் உள்ளன. தற்போது உத்தரப்பிரதேசத்தில் முதலமைச்சராக இருப்பவர் பகுஜன் சமாஜ் கட்சியைச் சேர்ந்த மாயாவதி. மாநிலத்தின் தலை நகரம்: லக்னோ. நம் நாடு சுதந்திரம் அடைந்தபோது 'ஐக்கிய மாகாணம்' என்று அழைக்கப்பட்ட மாநிலம், 1950 ஜனவரி 26ஆம் தேதி திருத்தி அமைக்கப்பட்டு, 'உத்தரப்பிரதேசம்' என்று பெயரிடப் பட்டது.




* நேருவுடன் ராஜீவ் காந்தி

சுமார் இரண்டு லட்சத்து 28 ஆயிரம் சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட மாநிலம். இந்துக்கள் தவிர முஸ்லிம், ஜைனர், பௌத்தர் வசிக்கும் உத்தரப்பிரதேசத்தின் இரு முக்கிய மொழிகள் : இந்தி, உருது. சுமார் 14 கோடி மக்களைக் கொண்ட உ.பி.யில் கல்வியறிவு பெற்றோர் 41 சதவிகிதத்தினர் மட்டுமே!


நமது புராணங்கள், மகான்களும் முனிவர்களும் வாழ்ந்த பூமி என்று உத்தரப்பிரதேசத்தைக் குறிப்பிடுகின்றன. ஸ்ரீராமர் அவதரித்த அயோத்தியும், ஸ்ரீ கிருஷ்ணர் அவதரித்த மதுராவும் உத்தரப் பிரதேசத்தில்தான் உள்ளன. புத்த மதமும், ஜைன மதமும் ஆறாம் நூற்றாண்டில் இந்தப் பகுதியில் செல்வாக்குடன் விளங் கின. குஷான வம்சம், குப்த வம்ச ஆட்சிக் குப் பிறகு, கஜினி முகம்மது படை யெடுப்பு, முகம்மது கோரி படையெடுப்பு கள் நிகழ்ந்தன. மொகலாயர்களின் ஆட்சி யைத் தொடர்ந்து பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முதல் கட்டமாக, 1857ல் நடந்த முதல் சுதந்திரப் போர் தொடங்கி, இந்தியா சுதந்திரம் பெற்றது வரையில் உத்தரப் பிரதேசத்தில் பல தலைவர் கள் சுதந்திரப் போராட்டத் தில் பங்கு பெற்றனர். அவர் களுள் நேரு குடும்பத்தின



* ஆக்ரா கோட்டை

- கௌதம்ராம்



உதித்த பூமி!

ரது பங்கு குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் பிரதமர்களாக இருந்தவர்களில் நேரு, லால் பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி, சரண் சிங், சந்திரசேகர், ராஜீவ் காந்தி, வி.பி.சிங் ஆகியோர் உ.பி.யைச் சேர்ந்தவர்கள்.

நம் நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, உத்தரப்பிரதேச மாநிலத்தின் முதல் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டவர், பிரபல காங்கிரஸ் தலைவரான கோவிந்த வல்லப பந்த். 1963ல், உ.பி. மாநிலத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற சுசேதா கிருபளானி இந்தியாவின் முதல் பெண் முதலமைச்சர் என்ற பெருமைக்கு உரியவர்.

உ.பி.யின் பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். கோதுமை, நெல், கரும்பு, பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துகள் ஆகியவை பிரதான விளைபொருட்கள். மலைந் தோட்டப் பயிர்கள் குறிப்பாக ஆப்பிளும், மாம்பழமும் இங்கே நிறைய விளைகின்றன. 'சிங்கரேலி' பகுதியில் நிலக்கரிச் சுரங்கங்கள் உள்ளன. தவிர மாநிலத்தின் மற்ற பகுதிகளில் சுண்ணாம்புக்கல், மாக்னசைட், பாஸ்பேட், டாலமைட், சிலிகா போன்ற கனிமங்கள் கிடைக்கின்றன. எண்ணெய் உற்பத்தி ஆலைகள், காகிதம், சிமென்ட், சர்க்கரை மற்றும் ரசாயனத் தொழிற்சாலைகளும் உள்ளன. உ.பி. மாநிலத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியில், டெல்லியை ஒட்டி அமைந்துள்ள பிரபலமான தொழில் நகரம் 'நோய்டா'. தோலில் செய்யப்பட்ட காலணிகள் மற்றும் இதர பொருட்களுக்குப் புகழ்பெற்ற நகரம் 'கான்பூர்'.

உ.பி. மாநிலத்தின் இந்துக்கள் கொண்டாடும் முக்கிய பண்டிகைகள் நவராத்திரி, தீபாவளி, சிவராத்திரி, ரக்ஷா பந்தன்

மற்றும் ஜென்மாஷ்டமி. விஜயதசமியை அடுத்து கொண்டாடப்படும் பரத் மிலாப், ராமாயணத்தில் ஸ்ரீராமர் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் முடித்து, நாடு திரும்பி தமது சகோதரன் பரதனைச் சந்திக்கும் நிகழ்ச்சியைக் குறிக்கும்.

சுற்றுலாத்துறையைப் பொறுத்தவரை,



பண்டிகை கோலாகலம்

உத்தரப்பிரதேசத்தில்தான் உலக அதிசயங்களுள் ஒன்றான தாஜ்மகால் இருக்கிறது. ஆக்ராவில் உள்ள கோட்டையும் இன்னொரு முக்கிய சுற்றுலாத் தலமாகும். ஆக்ரா கோட்டையின் ஒரு பகுதியில் இந்திய ராணுவத்தின் ஒரு படைப்பிரிவின் முகாம் உள்ளது. கோட்டையின் மற்ற பகுதிகளை, சுற்றுலாப் பயணிகள் கண்டு மகிழலாம். அக்பர் கட்டிய புதிய நகரமான பதேபூர் சிக்ரியும் காணவேண்டிய இன்னொரு இடமாகும்.

ஆக்ராவிலிருந்து 55 கி.மீ. தொலைவிலுள்ள 'பரத்பூர் தேசியப் பூங்கா' குளிர் காலத்தில் நூற்றுக்கணக்கான பறவை இனங்களுக்கு உறைவிடமாகும். காசி, பனாரஸ் என்ற பெயர்களால் அழைக்கப்படும் வாரணாசி இந்துக்களின் புனிதத் தலமாகும்.

கங்கையும், யமுனையும் கலக்கும் இடத்தில் அமைந்துள்ள நகரம் அலகாபாத். முகலாயப் பேரரசர் அக்பரால் 'அல்-இலகாபாத்' (இறைவனின் நகரம்) என்ற பொருளில் அமைக்கப்பட்ட நகரமே அலகாபாத். இங்கு 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மகா கும்ப மேளா நடக்கும். அலகாபாத்தில் உள்ள ஆனந்த பவன், நேரு குடும்பத்து மூதாதையர்கள் வாழ்ந்த மாளிகையாகும். 1970ல், இந்திரா காந்தி, அந்த மாளிகையை இந்திய அரசுக்கு நன்கொடையாக அளித்தார். அது இப்போது ஒரு மியூசியமாக மாற்றப்பட்டுள்ளது. நேருஜி முதல் ராஜீவ் காந்தி வரை அனைவரும் பயன்படுத்தப

துவாரகா கோயில்



பொருட்கள், இங்கே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. ஆனந்த பவனை அடுத்து இருப்பது, ஸ்வராஜ் பவன். இந்த இடத்தை மோதிலால் நேரு, காங்கிரஸ் கட்சிக்கு அலுவலகமாகப் பயன்படுத்துவதற்காக, நன்கொடையாக அளித்தார். இங்கேதான் இந்திரா காந்தி பிறந்தார். மேலும் கான்பூர், லக்னோ, முசூரி (கோடை வாசஸ்தலம்), சித்ரகூடு, மதுரா, மீரட், ஜான்சி என்று பல முக்கிய நகரங்கள் உள்ளன!


அதிசய மரங்கள்

ஆழி——

உலகில் பெரிய மரங்கள் இரண்டு வகை. ஒன்று, உயரத்தில் பெரியது. மற்றொன்று, பருமனில் பெரியது. கலிபோர்னியாவில் உள்ள 'செஞ்செக்குவாயா' இன மரங்கள் மிகவும் உயரமாக 120 மீட்டர் வரை வளர்கின்றன. சுற்றளவு 16 மீட்டர். எடை சுமார் 2000 டன்கள். இவ்வளவு பெரிய மரத்தின் விதைகள் மிகவும் சிறியவை. சுமார் 4 மி.மீ. தான்! 100 விதைகளின் எடை அரை கிராம் தான்!



பருமனில் பெரிய மரம் 'பெருஞ்செக்குவாயா.' இதன் உயரம் 83 மீட்டர். சுற்றளவு 32 மீட்டர். ஒரு பெருஞ்செக்குவாயா மரம் ஐக்கிய அமெரிக்காவில், தேசியப் பூங்காவில் இருக்கிறது. அந்த மரம் மின்னலால் தாக்கப்பட்டு முறிந்து விட்டது. 24 மீட்டருக்கு மேல் சுற்றளவு கொண்ட அதன் அடிப்பக்கம் குடையப்பட்டு, அதன் வழியே ஒரு சாலை போடப்பட்டிருக்கிறது. அந்தக் குடைவுப் பாதை வழியே, கார் போன்ற வாகனங்கள் செல்கின்றன!



பொதுவாக, யூகலிப்டஸ் மரங்கள் உயரமாக வளரக்கூடியவை. 1885-ஆம் ஆண்டு, ஆஸ்திரேலியாவில், விக்டோரியா மாநிலத்தில், 140 மீட்டர் உயரம் உள்ள ஒரு 'யூகலிப்டஸ்' மரம் கண்டுபிடிக்கப்பட்டது. அதுதான் உலகிலேயே மிக உயரமான மரம். யூகலிப்டஸ் மரங்கள் மிகவேகமாக வளரக்கூடியவை. ஆண்டுக்கு 10 மீட்டர் அளவில், குறிப்பிட்ட காலம் வரை அவை வளர்கின்றன.





உலகிலேயே மிகவும் சிறிய மர இனம் எது? ஆர்க்டிக் பிரதேசங்களில், துந்திரப் பகுதிகளில் உள்ள 'குள்ள வில்லோ' மரங்கள் தாம். அவை 10 செ.மீ. உயரத்திற்கு மேல் வளர்வதில்லை. மிகக் குறைவான வெப்பநிலையும், பனிக்காற்றும் பாதிப்பதால் அங்கே மரங்கள் உயரமாக வளர்வதில்லை.

உலகிலேயே மிகவும் வயதான மரம் கலிபோர்னியாவில் உள்ள 'குஞ்சக் கூம்பு பைன்' மரம் தான். இந்த வகை மரங்களில் ஒன்று அங்கே 4900 ஆண்டுகளாக இருந்து வருகிறது. இந்த மரத்தின் ஒரு வேர் பூமியில் சுமார் 50 கி.மீ. தூரம் நீண்டு செல்லும். இந்தவகை மரங்கள் விழுந்து காய்ந்து போய் 10,000 ஆண்டுகள் ஆனாலும் மரித்துப் போவதில்லை!








மடகாஸ்கர் தீவில், 'மூன்று புட்டி மரம்' என்னும் பெயர் உள்ள மரங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மரமும் மூன்று புட்டிகளைச் சேர்த்து வைத்தது போல இருக்கும். உச்சியில் சில கிளைகள்; ஆனால், இலைகள் இல்லை. சிறு சிறு கிளைகளே இலைகள் மாதிரிச் செயல்படுகின்றன.

ஒரு மரத்தைக் குறுக்கே அறுத்தால், வளையம் வளையமாக, வரிவரியாக ரேகை தெரியும். அதை எண்ணிக் கணக்கிட்டு அந்த மரத்தின் வயதைக் கண்டுபிடிக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்!

மெக்ஸிகன் பாலைவனப் பகுதிகளில், 'யானை மரங்கள்' இருக்கின்றன. இந்த மரங்களின் அடிப்பகுதி குட்டையாகவும், பருமனாகவும், மடிப்புகளுடன், ஒரு யானை மல்லாந்து படுத்திருப்பது போலத் தோன்றும். வறண்ட காலங்களில் இதற்கு இலைகள் இருப்பதில்லை. ஒரு மழை பெய்ததும் இந்த மரம் உடனே துளிர்த்துப் பசுமையாகிவிடும். உடனே பூத்து, காய்த்து, பழங்களையும் விதைகளையும் உற்பத்தி செய்துவிடும். எல்லாம் 21 நாட்களுக்குள்!





நமீப் பாலைவனத்தில்,'குறு-போபாப்' மரங்கள் இருக்கின்றன. இவற்றைத் 'தலைகீழ் மரங்கள்' என்று அங்கே குறிப்பிடுகிறார்கள். இந்த மரம் பார்ப்பதற்குத் தரையில் தலைகீழாகக் குப்புற விழுந்து, வேர்கள் மேலே தெரியும்படி புதைந்து இருப்பது போல் தோன்றும். இதன் அடிப்பகுதி மிகவும் குட்டையாகவும், கிளைகள், இலைகள் இல்லாமல், வேர்கள் மாதிரித் தெரியும். உண்மையில் இதன் வேர்கள் பூமிக்குள் இருக்கின்றன!

மடகாஸ்கரில் 'ஆக்டோபஸ்' மரங்கள் இருக்கின்றன. ஆக்டோபஸ் மரத்திற்குப் பருமனான அடிப்பகுதியும், தரையிலிருந்து 1 மீட்டர் உயரத்திற்கு மேல், கடல் பிராணியான ஆக்டோபஸ்ஸின் கைகள் போன்ற கிளைகள் வானத்தை நோக்கி வளர்ந்திருக்கின்றன! கிளைகளில் முட்களுடன் கூடிய மிகச்சிறிய இலைகளும் உள்ளன.





'பீப்பாய் மரம்' ஆப்பிரிக்காவில் இருக்கிறது. இதன் அடிப்பகுதி மிகப் பெரிய பீப்பாய் மாதிரி உப்பி இருக்கும். மழைக் காலத்தில் இந்தப் பீப்பாய்ப் பகுதியில் ஏராளமான நீரை நிரப்பிக் கொள்ளும். கோடைக்காலத்தில் அந்த நீரைப் பயன்படுத்திக் கொள்ளும். இது எப்போதும் நீர் உள்ள மரமாக இருப்பதால், இதைக் கறையான்கள் அரிப்பதில்லை, தீயும் பற்றுவது கிடையாது!

வெப்பமண்டலத்தில், சதுப்புநில 'மாங்ரோவ்' காடுகள் உள்ளன. மாங்ரோவ் மரங்களின் நீண்ட வேர்கள், பூமிக்குள் புதையாமல், கடற்கரையை ஒட்டிய உப்பு நீரில், மேலே தெரியும்படி வளர்கின்றன. அந்த வேர்களே வெளிக்காற்றில் உள்ள ஆக்ஸிஜனைச் சுவாசிக்கின்றன. மரத்தில் இருக்கும்போதே இதன் காய்களில் உள்ள விதைகள் முளைத்து, சேற்றில் விழுந்ததும் உடனே வளரத் தொடங்கிவிடுகின்றன!




ஃபிரான்ஸில் உள்ள ரெயிம்ஸின் அருகில் பயங்கரமான ஒரு காடு இருக்கிறது. அந்தக் காட்டில், உயர்ந்து, நிமிர்ந்து வளர்வதற்குப் பதிலாக 'பீச்' மரங்கள் எல்லாப் பக்கங்களிலும் முறுக்கிக் கொண்டும், தரையில் படர்ந்தும் சிக்கலான அமைப்பில் வளர்ந்திருக்கின்றன. ஆனால், பீச் மரங்கள் 45 மீட்டர்கள் உயரம் வளரக்கூடியவை. 1000 ஆண்டுகளுக்கு முன் இங்கே வாழ்ந்த துறவிகள் தாம் இந்த மரங்களை இவ்வாறு முரண்பாடாக வளரும்படிச் செய்திருக்கிறார்கள் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.





உலகில் உள்ள எல்லா மரங்களிலும் 'ஓக்' மரத்திற்குத்தான் வேர்கள் அதிகம். ஒரு பெரிய ஓக் மரத்தின் வேர்களையெல்லாம் தோண்டியெடுத்து, அவற்றைத் தொடர்ச்சியாக வைத்துக்கொண்டே போனால் அது சுமார் 40,000 கி.மீ. நீளம் இருக்கும்! அதைக்கொண்டு பூமியின் மேல் ஒரு சுற்று சுற்றிவிடலாம்!

இந்தியாவுக்கே உரித்தான சந்தன மரம் 'வேர்ப் புல்லுருவி' வகையைச் சேர்ந்தது. அது நிலத்தில் தானே சத்துக்களைத் தேடிக்கொள்வதில்லை; ஏற்கெனவே முளைத்து வளர்ந்துள்ள பக்கத்து மரங்களின் வேர்களில் இதன் வேர்கள் பின்னிப் பிணைந்து கொண்டு, அந்த மரங்களின் சத்துக்களைக் கிரகித்துக் கொண்டு வளரக்கூடியவை. சந்தன மரங்கள் ஒரே இனமாகத் தனித்து வளர்வதில்லை!



ஜப்பானில் 'போன்சாய்' என்னும் ஒரு 'மரம் வளர்ப்பு முறை' இருக்கிறது. அதாவது, ஆலமரம், அரச மரம், மூங்கில் முதலிய 200 வகைக்கு மேற்பட்ட பெரிய மரங்களைச் சிறு தொட்டிகளில் வளர்க்கும் முறை அது. மரங்கள் சிறிய கன்றுகளாக இருக்கும் போதே கொண்டு வந்து சிறு தொட்டிகளில் வைத்து விடுவார்கள். பிறகு ஆண்டுக்கு ஒரு தடவை அவற்றின் ஆணிவேர் தவிர மற்ற வேர்களை வெட்டி விட்டு மறுபடியும் தொட்டியில் நட்டு வளர்ப்பார்கள். போதிய வேர்கள் இல்லாமல், தேவையான சத்துக்கள் கிடைக்காமல் அவை சிறியவையாகவே இருக்கும்!





பெயர் : ....

முகவரி : ....

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :


சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்.) கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

துறவியின்

மருதூர் என்ற அழகிய ஊரில் சிவகோசரியார் என்ற இளந்துறவி இருந்தார். எப்போதும் புன்னகை தவழும் முகத்துடன் இருப்பார். சிறுவயது முதலே ஞானம் பெற்றவர். ''சிவசிவ'' என்ற சொற்களை மட்டுமே உச்சரிப்பார். வேறு எதுவும் பேச மாட்டார்.

அவரை வேறு சொற்களையும் பேச வைக்க வேண்டும் என்ற ஆர்வத்தால், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அவரிடம் பேச்சுக் கொடுத்துப் பார்ப்பார்கள். யார் முயற்சியும் வெற்றியடையவில்லை. எனவே அரை ''சிவசிவ'' சாமியார் என்றே மக்கள் குறிப்பிடுவர்.

ஊர் மக்கள் மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருந்தாலும் பரபரப்பாகப் பேசிக்கொண்டிருந்தாலும் அதே புன்முறுவலுடன் பார்த்துக்கொண்டிருப்பார். ஒருநாள் இரண்டு பேர் சண்டையிடுவதைக் கண்டார். அதில் ஒருவன் வலிமையான முரடன். மற்றவன் மெலியவன். ஆதலால் மெலியவனைக் காப்பாற்ற பலவகைச் சைகைகளைக் காட்டி விட்டுவிட வேண்டினார் சிவகோசரியார். முரடனோ




இரா. மனோன்மணி

சாட்சி!

அதைப் பொருட்படுத்தாமல் முரட்டுத் தனமாகத் தாக்கினான்.

வாய்ச் சண்டை கைச்சண்டையாக மாறியது. மெலியவனை வலியவன் நையப் புடைத்தான். சாட்சியாக யாரும் இல்லை. இருக்கும் துறவியும் ''சிவசிவ'' என்ற சொற்களைத் தவிர வேறு சொற்களைப் பேச மாட்டார் என்று கேள்விப் பட்டிருந்ததால் முரடனுக்குத் துணிச்சல் அதிகமாகியது.

அடிவாங்கியவன், தன்னைக் காரணமின்றி அடித்த முரடனுக்கு, தகுந்த தண்டனை கொடுக்க பஞ்சாயத்தாரை நாடினான். பஞ்சாயத்து செய்யும் நடுவர் மெலியவனிடம், ''இவன்தான் உன்னை அடித்தான் என்பதற்கு யார் சாட்சி?'' என்று கேட்டார். அவன் 'சிவசிவ' சாமியாரை அழைத்துவந்து நிறுத்தினான்.





வின்னர்ஸ்!

விடையைச் சொல்; பரிசை வெல் 11ல் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானோர் சரியான விடைகளை எழுதி அசத்திவிட்டீர்கள். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு தலா **ரூ.100/-** வீதம் வழங்குகிறோம்!

சரியான விடைகள் :

1. ஏப்ரல் 13-1919
2) ஆச்சார்யா சரகர்
3) அப்துல்லா
4) ஜூன் 1 - 2008
5) தேவநாதன்

பரிசு பெறுவோர் :

1. மு.சாய்பிரபு - காட்டுத்தோட்டம்
2. பி.ஸ்டெபினா - பெருங்குடி
3. எம்.லோகேஷ் பாலசுந்தரம் - கீழச்சீவல்பட்டி
4. இரா.காயத்ரி - சென்னை
5. எச். சாய்க்ருத்திகா - சென்னை
6. எஸ்.முரளிகிருஷ்ணன் - திருச்சி
7. வெ.பவித்ரா - திருப்பத்தூர்
8. எஸ்.மகேஷ்வரி - தெற்கு வண்டாளம்
9. எல்.செலக்ஸ்டின் அலெக்ஸ் - மதுரை
10. கே.எம்.நந்தினி - கும்பகோணம்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள் ; கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி!



'இந்த 'சிவசிவ' சாமியார்தான் சாட்சி என்றால் ,வெற்றி நமக்கே' என்று முரடன் நினைத்தான்.

பஞ்சாயத்தாரிடம் அடித்தவனும், அடிபட்டவனும் அவரவர் பிரச்னையைக் கூறினார்கள். பஞ்சாயத்தார், 'யார் முதலில் அடித்தது? யார் யாரை அதிகமாக அடித்தார்கள்' என்று விவரமாசத் துறவியிடம் கேட்டனர்.

'சிவசிவ' சாமியார் சிரித்தார். நடுவரைப் பார்த்தார். நடுவர், சாமியார் வாயிலிருந்து வரப்போகும் வார்த்தைகளைக் கேட்கும் ஆவலோடு அவரைப் பார்த்தார். சாமியாரோ, அடித்தவனுக்கும், அடிபட்டவனுக்கும் நடுவில் வந்து நின்றார்.

''இச் சிவத்தை அச்சிவ சிவ
அச்சிவத்தை இச்சிவ
சிவசிவ
இச்சிவத்தை அச்சிவ
சிவசிவசிவசிவ
சிவசிவசிவசிவ''



'இந்த 'சிவசிவ' சாமியார்தான் சாட்சி என்றால் வெற்றி நமக்கே' என்று நையப் புடைத்தவன் இறுமாந்திருந்தான்.

என்றார். அவர் 'சிவ' என்ற சொல்லை வைத்தும், அடிப்பது போன்ற சைகையை வைத்தும், யார் யாரை முதலில் அடித்தது, யார் யாரை அதிகமாக அடித்தது என்பதைப் பஞ்சாயத்தார்க்கு விளக்கினார்.

துறவி சொன்ன சாட்சியின் மூலம் நடுவர் உண்மையை யூகத்தால் உணர்ந்து தகுந்த தீர்ப்பு வழங்கினார். வலியவன் அதிர்ச்சி அடைந்தான்; மெலியவன் மகிழ்ச்சியடைந்தான்!



கோகுலம்

எக்ஸ்பிரஸ்









இம்மாத எக்ஸ்பிரஸில் பயணிக்கும் குட்டீஸ்கள்...
















வெட்டுங்க! ஒட்டுங்க!!



என்ன இது?

எப்படி வெட்டறது?

எங்கே ஒட்டறது?

தெரிஞ்சுக்கறதுக்கு 56-ஆம் பக்கம் போங்க!





புள்ளிகளை இணையுங்கள்!

1 முதல் 10 வரையிலான புள்ளிகளை இணைத்தால் இங்கே இருப்பது யார் என்பது தெரியும்!



தெரிஞ்சுக்கோங்க

20 திராட்சைப் பழங்கள்; 4 பேரீச்சம் பழங்கள்; 2 ஆரஞ்சுப் பழங்கள் ஆகியவற்றில் உள்ள சத்துகள் ஒரு வாழைப்பழத்தில் உண்டு!

பலவகை வாழைப்பழங்களின் குணங்கள்...

மலை வாழைப்பழம் : மலச் சிக்கலைத் தீர்க்கும்.

செவ்வாழைப்பழம் : உயிரணுக்களைப் பெருக்கும்.

மஞ்சள் (பூவன்) வாழைப்பழம் : குடல் புண்களை ஆற்றும்.

பேயன் பழம் : அம்மை நோயால் குடலில் சேரும் நஞ்சு, வேக்காடுகளை முறிக்கும்.

ரஸ்தாளிப் பழம் : நாவுக்குச் சுவை தரும்.

மொந்தன் பழம் : உடல் வறட்சியைப் போக்கும்.

பச்சைப் பழம் : உடலுக்குக் குளிர்ச்சி தரும்.

நேந்திரம் பழம் : தோலுக்கு மினு மினுப்பைத் தரும்.

- ப.எழிலன்,
சென்னை





வா... வா... வாழைப்பழமே!

குட்டிக்கதை

ஓர் ஊரில் பாலன் என்பவன் இருந்தான். அடுத்தவர்கள் நன்றாக இருந்தால் அவனுக்குப் பிடிக்காது. அவர்கள் நல்லது செய்தாலும் பிடிக்காது.

ஒரு நாள் பாலன் வியாபாரத்துக்காக வெளியூருக்குப் போனான். அரிசி மூட்டையைத் தலையில் சுமந்துகொண்டு நடந்து சென்றான்.

அப்போது அந்த வழியாக மாட்டு வண்டியில் சென்றுகொண்டிருந்த ஒருவர், ''நண்பரே! வண்டியில் ஏறிக்கொள்ளுங்கள்'' என்றார்.

பாலன் ''அதெல்லாம் வேண்டாம். என்னை வண்டியில் ஏற்றி, அதன் மூலம் ஊருக்குள் நான்கு பேர் உன்னைப் பாராட்டி நல்ல பெயர் எடுப்பதுதானே உன் திட்டம்'' என்றான்.

வண்டிக்காரன் சென்றுவிட்டான். அது நல்ல வெயில் காலம். பாலனுக்குத் தாகம் எடுத்தது. ஓர் ஊர் வழியே போனபோது குடிக்க ஏதாவது கிடைக்குமா என்று பார்த்தான்.

ஒரு வீட்டுத் திண்ணையில் பானை வைத்திருந்தார்கள். அதில் நீர்மோர் இருந்தது. எடுத்துக் குடிக்கப் போனவன் 'புண்ணியம் தேடுவதற்கு அல்லவா இந்த காரியம் செய்கிறார்கள்? நான்



நீர்மோர் குடித்தால், இந்த வீட்டுக்காரனுக்குப் புண்ணியம் சேர்ந்துவிடுமே' என்று எண்ணினான். எனவே, நீர்மோரைக் குடிக்கவில்லை.

தாகத்துடன் மேலே நடந்தான். தாகம் அதிகமாயிற்று. எங்காவது குளம் இருந்தால் தண்ணீர் குடித்துக்கொள்ளலாம் என்று தொடர்ந்து நடந்தான். ஆனால், ஊரில் இருந்த குளத்தில் தண்ணீர் இல்லை.

ஊரைக் தாண்டியதும் ஒரு பாலைவனம் வந்தது. இவன் நடந்தான். வெயில் நெருப்பாகக் கொதித்தது. தாகத்தில் இவனது நாக்கு வறண்டது.

எங்காவது தண்ணீர் கிடைக்குமா என்று தேடி அலைந்தான். மயங்கி விழுந்தான். 'தண்ணீர்... தண்ணீர்...' என்று தவித்துக் கொண்டே இறந்து போனான்.



பாவம் பாலன்!

- ரா.நர்மதா, ஏழாம் வகுப்பு,
சிவபாக்கியம் முத்துசாமி
மெட்ரிக்குலேஷன் பள்ளி, நாமக்கல்





மு.விஷ்ணுவர்த்தன்,
பத்தாம் வகுப்பு, சிவபாக்கியம்
முத்துசாமி மெட்ரிக் பள்ளி,
மாதேசம்பாளையம்

த.பிரகல்யா,
எட்டாம் வகுப்பு,
பொன்னையா இராமஜெயம்
பொதுப் பள்ளி, தஞ்சாவூர்



ப.மா.பிரதீபா,
எட்டாம் வகுப்பு,
யு.ஆர்.சி. பழனியம்மாள்
மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
ஈரோடு



உங்கள்



கே.தனசேகர்,
எட்டாம் வகுப்பு, காமராஜ்
மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்



அ.க. சாய் ஈஷ்வர்,
ஏழாம் வகுப்பு, ஆண்கள்
மேல்நிலைப் பள்ளி,
ஸ்ரீரங்கம்

ஜி.ஹரிஹரன்,
ஏழாம் வகுப்பு,
மகாத்மா காந்தி மேல்நிலைப்
பள்ளி, திருச்சி



கைவண்ணம்!



பிறந்த நாளில் பினாட்டா!




வெளிநாடுகளில் பிறந்த நாளைக் கொண்டாடும்பொழுது ஒரு புதுமையான விளையாட்டு ஏற்பாடு செய்யப்படும். விழாவைக் கொண்டாடும் நபர் வீட்டில் இந்த விளையாட்டு நடக்கும்.

பினாட்டா (Pinata) என்று கூறப்படும் இந்த விளையாட்டுக்காக பெரிய அளவு பொம்மைகள், பல ரகத்தில் கடைகளில் கிடைக்கும். அதை வாங்கி, அதன் உடல்பாகம் (தலைமுதல் பாதம் வரை) முழுவதிலும் சாக்லேட்டுகளை நிரப்புவார்கள். அந்தப் பொம்மையை 'பார்ட்டி' நடக்கும் ஹாலில் தொங்க விடுவார்கள்.

பிறந்தநாள் விழாவுக்கு வருகை தந்திருக்கும் சிறுவர், சிறுமியர் கண்களை ஒரு துணியால் கட்டி, கையில் பொம்மையை அடிக்க ஒரு தடியையும் கொடுப்பார்கள். ஒரு அடி அடித்தவுடனேயே அங்கும், இங்கும் ஆடும் பொம்மையை மனக்கண்ணில் குறி வைத்து அடிக்க வேண்டும். யார் யார் அடித்து எவ்வளவு சாக்லேட்டுகள் கீழே கொட்டுகிறதோ அதை அவரவர் எடுத்துக் கொள்ளலாம். இந்த பினாட்டா விளையாட்டில் சிறுவர், சிறுமியர் மிகவும் ஆவலோடு பங்கேற்பார்கள்!

- சுபிக்ஷா சிவசுப்ரமணியன்,
நான்காம் வகுப்பு,
விவேகானந்தா வித்யாலயா,
சென்னை

பிடியில்லாத குடை!



I. 1. பந்தலிலே தொங்குதடி கொத்தாத பச்சைப் பாம்பு - அது என்ன?

2. வாய்க்கு வேலை; காதுக்கு கானம் - அது என்ன?

3. ஓட்டு வீட்டுக்காரன்; எல்லா ஊருக்கும் சொந்தக்காரன் - அவன் யார்?

4. வெளிச்சம் சுமந்தபடி விடிய விடிய வீதிகளில் சுற்றுவான் - அவன் யார்?

- கே.பச்சாயி,
எட்டாம் வகுப்பு,
கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா,
ஏற்காடு.

II. 1. ஒத்தைக்கால் கோழிக்கு வயிறு நிறைய முட்டை - அது என்ன?

2. வானுக்கும் பூமிக்கும் ஒரே கம்பி; வளம் கொழிக்க வைக்கும் கம்பி - அது என்ன?

3. ஓடையிலே ஓடாத நீர், உப்புக் கரிக்காத நீர் - அது என்ன?

4. பிடியில்லாத குடையைத் தொட முடியலை - அது என்ன?

5. பெரிய கிணற்றைச் சுற்றி வெள்ளைக் கற்கள் - அது என்ன?

- ப.நிர்மல் ஜஸ்டின்,
உறுப்பினர் எண்.500,
சிதம்பரம்

விடைகள்

I. 1. புடலங்காய் 2. நாதஸ்வரம் 3. ஆமை 4. மின்மினிப் பூச்சி
II. 1. மிளகாய் 2. மழை 3. கண்ணீர் 4. வானம்
5. வாய், பற்கள்

கவிதைப் பூங்கா



கன்றுக் குட்டி!

அம்மா என்று அழைத்திடும்
ஆடி ஓடிக் களித்திடும்
சும்மா நிற்க மறுத்திடும்
சுறுசுறுப்பாய் திரிந்திடும்

பச்சைப் புல்லைக் கடித்திடும்
பாலை முட்டிக் குடித்திடும்
குச்சி போன்ற கால்களால்
குதிக்கும்; பிறகு படுத்திடும்

கயிறு கொண்டு கட்டினால்
கொம்பில் வாமல் முட்டியே
பயமும் இன்றி துள்ளித்தான்
பாயும் கன்றுக் குட்டியே!

- மா.கண்ணன்

அம்மா அன்பே என்னுயிரே
ஆசை வணக்கம் நான் சொல்வேன்
அப்பா மந்திர மானவரே
அன்பால் வணக்கம் நான் சொல்வேன்!

ஆசான் குருவே வழிகாட்டி
அனுதினம் வணக்கம் நான் சொல்வேன்
இறைவா என்னைப் படைத்தவனே
என்றும் பணிவின் வணக்கங்கள்!

அம்மா அப்பா ஆசானே
அருளைப் பொழியும் ஆண்டவனே
அறிவில் தெளிவு நான்பெறவே
அனைத்து நலமும் அருள்வீரே!

- அழகுதாசன்

ஆசை வணக்கம்!






கல்வியைத் தேடி...

குருவி இரையைத் தேடிக்
கொல்லைப் பக்கம் ஓடும்!
அருவி தரையில் ஓடி
ஆறாய்க் கடலைச் சேரும்!

வறியோர் பொருளை நாடி
வள்ளல் இல்லம் போவார்!
சிறியோர் கல்வி தேடிச்
செல்வீர் பள்ளிக் கூடம்!

படிப்பைப் போல உதவும்
பக்கத் துணை வேறில்லை!
படிப்பால் நன்மை அடைந்தோர்
பாரில் அதிகம் அறிவீர்!

- பண்ணுருட்டி பரமசிவன்



அமெரிக்காவின் கிழக்கிலே
அட்லாண்டிக் கடலிலே
உள்ளதொரு 'தீவு'டா...
அதன் பேரு பெர்முடா!

அமெரிக்க கப்பலும்
அந்த வழியே போகுமாம்
அடுத்த நிமிடம் பார்த்திட்டால்
மறைந்துவிடும் மாயமாய்!

உலகத்திலே சுழல்மையம்
பன்னிரண்டு இருப்பதாய்
சேன்டர்ஸன் என்பவர்
சேதியினைச் சொல்கிறார்!

காந்த விசை இருப்பதால்
காணாமல் போவதாய்
சாந்தமாக சொல்கிறார்
சரியும் தப்பும் புரியலே!

மாந்தர் வாழும் பூமியில்
என்ன என்ன அதிசயம்?
மனித அறிவு சொல்லுமோ
மதிமயக்கம் வெல்லுமோ?

- வெ.தமிழழகன்

பெர்முடா!



வண்ணம் தீட்டுங்கள்!



இங்குள்ள படத்தை
உங்கள்
கைவண்ணத்தால்
அழகுபடுத்துங்க
குட்டீஸ்!



ஹாய் குட்டீஸ்!

ஒரு பரபரப்பான... விறுவிறுப்பான விளையாட்டுக்கு ரெடியா? நடுப் பக்கத்தை (40, 41) ஒருமுறை பாருங்கள்! இரண்டு பக்கங்களும் ஒரே மாதிரியான படங்கள் உள்ளன. சின்ன வித்தியாசம், இடது பக்கத்துப் படங்களில் எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நீங்கள் செய்ய வேண்டியவை...



ப்ளஸ்... மைனஸ்... வின்னர்ஸ்!

✱ நடுப் பக்கத்தைப் பிரித்து எடுங்கள். பிறகு இடது பக்கத்திடமிருந்து வலது பக்கத்தைத் தனியாக கத்தரித்துவிடுங்கள்.

✱ எண்கள் இல்லாத வலது பக்கத்தின் பின்புறம் ஒரு வெள்ளைத்தாளை ஒட்டுங்கள். நன்கு காய்ந்த பிறகு பன்னிரண்டு கட்டங்களையும் தனித் தனியாக கத்தரித்துக்கொள்ளுங்கள்.

✱ கத்தரித்த ஒவ்வொரு படத்தையும் நான்காக மடித்துக்கொள்ளுங்கள். இனி விளையாடலாம்! உங்கள் நண்பர்களை அழைத்துக்கொள்ளுங்கள். எத்தனை பேர் விளையாடுகிறீர்களோ அவர்களின் பெயர்களை ஒரு தாளில் எழுதிக்கொள்ளுங்கள்.

✱ பன்னிரண்டு சீட்டுகளையும் குலுக்கிப் போட்டு ஆளுக்கு ஒன்றை எடுத்து பிரியுங்கள். உங்களுக்கு எந்தப் படம் வந்துள்ளதோ அதற்கு உங்களிடமுள்ள இடது பக்கப் படங்களில் பார்த்து என்ன மதிப்பெண் உள்ளது என்று கவனித்து, தாளில் குறித்துக்கொள்ளுங்கள்.

✱ உதாரணமாக உங்களுக்கு +10 என்று வந்தால் உங்கள் பெயரில் பத்து மதிப்பெண் சேரும். -10 என்று வந்தால் பத்து மதிப்பெண்கள் கழியும். 0 என்று வந்தால் எந்த மதிப்பும் இல்லை.

✱ பிறகு சீட்டுகளை மீண்டும் குலுக்கிப் போட்டு எடுங்கள். இப்படியே நீங்கள் விரும்புகிற வரையில் விளையாடிவிட்டு முடிவில் யார் அதிக மதிப்பெண்கள் பெற்றார் என்பதைக் கணக்கிடுங்கள். அவரே வெற்றி பெற்றவர்.

✱ மதிப்பெண் கூடுவதும் (+), குறைவதுமாக (-) இருப்பதால் விளையாட்டு பரபரப்பாக இருக்கும். முதல் சுற்றிலேயே ஒருவருக்கு மைனஸ் வந்தால், அடுத்த முறை அவர் எடுத்த மதிப்பெண்ணில் கழிக்க வேண்டும்.


விளையாடி மகிழுங்கள்; வெற்றி பெறுங்கள்!

– யுவா


+10
0
-15
-10
+25
-5
+20
+5
-20
+50
-15
0



வழிகாட்டுங்கள்



வண்டே... வண்டே...

குட்டி வண்டு, தனது தாயை அடைய வழிகாட்டி உதவுங்கள் குட்டீஸ்!

எப்படிப் பேசுவாங்க?

''கற்றது கை மண் அளவுன்னு அவர் சொல்றாரே, எப்படி?''

''அவர் ஒரு குயவர்.''

- பி.எஸ்.ஜேம்ஸ், தூத்துக்குடி



''நீங்களெல்லாம் பெரியவர்களாகி நம் நாட்டுக்கு நல்ல பேரு வாங்கித் தர முயற்சிக்கணும்!''

''ஏன் சார்? இந்தியா என்கிறது நல்ல பேரு இல்லியா?''

- ச.ஆ.கேசவன், இனாம்மணியாச்சி



''ரகு, உன்னைப் பார்க்க டாக்டர் வந்திருக்கார்.''

''எனக்குதான் உடம்பு சரியில்லேல்ல... யாரையும் பார்க்க முடியாதுன்னு சொல்லி அனுப்பும்மா.''



''செல்ஃபோனுக்கும் மனுஷனுக்கும் என்ன வித்தியாசம்?''

''கால் இல்லைன்னா மனுஷனாலே பேலன்ஸ் பண்ண முடியாது. பேலன்ஸ் இல்லைன்னா செல்ஃபோன்ல கால் பண்ண முடியாது.''

- டி.கதிரவன், பத்தாம் வகுப்பு, அ.மே.நி. பள்ளி, சிறுமுகைப்புதூர்



''கிரிக்கெட் பிளேயர்ஸ் எல்லாம் எப்படிப் பேசுவாங்க தெரியுமா?''

''ஓவரா.''

- ச.அருண்சித்தார்த், வடலூர்



இவ்வாண்டு கோடை விடுமுறையைக் கழிக்க, எங்கள் தந்தை நீலகிரி மாவட்டதுக்கு அழைத்துச் சென்றார். எங்கு திரும்பினாலும் கம்பீரமான மலைச் சிகரங்கள். பச்சை வெல்வெட் போன்று தோற்றமளிக்கும் தேயிலைத் தோட்டங்கள். வாசனை கொண்ட யூகலிப்டஸ் மரங்கள்... 'ஏய் மனிதா! உன்னைவிட நாங்கள் உயர்ந்தவர்கள். உயரத்தால் மட்டுமல்ல, நோயைத் தீர்க்கும் மருந்தை வைத்திருப்பதாலும், வாசனையைப் பரப்புவதாலும்' என்று



சொல்வதைப் போலிருந்தது. குன்னூரிலிருந்து ஊட்டி செல்லும் சாலையில் பேருந்து நிலையத்துக்கு அருகே உள்ள மெழுகு உலகத்துக்குச் சென்றோம்.

குழந்தை பளபளவென்று இருந்தால், 'மெழுகு பொம்மை போல் உள்ளது' என்று கொஞ்சுவோம். இங்கு மெழுகே மனிதனாக உள்ளது. அங்கிருந்த கலைஞர்கள், ''இறைவன் படைத்த உலகை எல்லாம் மனிதன் ஆளுகிறான். மனிதன் படைத்த சிலையில் எல்லாம் இறைவன் வாழ்கிறான்' என்று ஒரு பாடல் உண்டு. அதேபோன்று நாங்கள் சிற்பிகள்'' என்றனர். இந்தக் கலைக்கூடத்தில், காந்தி, சத்ரபதி சிவாஜி, அப்துல் கலாம், பாரதப் பிரதமரான மாண்புமிகு மன்மோகன்சிங், சுவாமி விவேகானந்தர், வாழும் கலையை உபதேசிக்கும் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் ஸ்வாமி, கீதையை நம் நாட்டுக்குத் தந்த பகவான் ஸ்ரீ கிருஷ்ணரையும், மகான் ஆதிசங்கரர் அவர்களையும் நேரில் பார்த்தது



வியக்க வைத்த மெழுகு





போலிருந்தது. சத்தியமங்கல காடு என்றாலே நினைவுக்கு வரும் சந்தனக் கடத்தல் வீரப்பனையும் நம்ம கண்முன் நிறுத்தினார்களே, அதற்குக் காரணம் சிற்பிகள். கொஞ்சம் கவனம் சிதறினாலும் மெழுகு பொம்மை உருத்தெரியாமல் போய்விடும். வேகமாக கைகளால் அழுத்தினாலும் நசுங்கிவிடும். அப்பப்பா! நம் மெழுகுக் கலை சிற்பிகளின் ஆற்றலை எண்ணி எண்ணி வியந்தோம். நினைத் தாலே அருவருப்பைத் தரும் தொழு நோய், ஒட்டுவாரொட்டி வியாதி அல்ல என்று யார் சொன்னாலும் கேட்காத வர்களுக்கு, அன்னை தெரஸா அவர்கள் தொழு நோயாளிகளுடனேயே இருப்பதாக காட்டப்படுவது, இவை அனைத்துக்கும் மேலாக குடித்துவிட்டு வண்டியை ஓட்டு வதும், அதனால் ஏற்படும் விளைவுகளைக் காட்டுவது எல்லாம் சிலையா? கலையா? இல்லவே இல்லை! இவைதான் கலை யுலக பிரம்மாக்கள் உருவாக்கிய சிருஷ்டிகள்!

இவற்றைப் பார்த்ததில் நாங்கள் இந்த உலகத்தில் இல்லை. மெழுகு உலகத்தில் இருந்தோம்!

-என்.ஆர்.ரஞ்சனி,
உறுப்பினர்
எண் : 75,
ஏழாம் வகுப்பு,
ஜி.ஜி.என்.
மெட்ரிக் பள்ளி,
சென்னை



உலகம்!



நாடோடிக் கதை

நண்பன் சொன்ன யோசனை!

சீன நகரமொன்றில் நீண்ட வருடங்களுக்கு முன் 'ஸுங்' என்பவன் இருந்தான். யார் எதைச் சொன்னாலும் அதைச் செய்துவிட்டு வந்து, வீட்டில் மனைவியிடம் வாங்கிக் கட்டிக்கொள்வான். அவன் மனைவி பொல்லாதவள். இவனது தத்துப்பித்துக் காரியங்களால் எரிச்சலடைவாள். வீட்டில் எப்போதும் ஒரே ரகளைதான்!

சீனாவில் அன்றிலிருந்து இன்றுவரை சைக்கிள் வாகனம் ஒரு உயிர் நண்பன் போல. ஸுங்கிடமும் அழகான சைக்கிள் இருந்தது. அதில்தான் அவன் அலுவலகம் சென்று வருவான். ஒரு நாள் மாலை வீட்டுக்கு ஸுங் நடந்து வந்துகொண்டிருப்பதை அவன் மனைவி பார்த்தாள். வாசலிலேயே அவனை மடக்கி, ''சைக்கிள் எங்கே?'' என்று கேட்டான்.

''அதுவா அது... இந்த சைக்கிள் நன்றாக இல்லை என்று ஒரு நண்பன் சொன்னான். ஆகவே அதை விற்றுவிட்டேன்'' என்றான்.

அவன் பதிலைக் கேட்டு மனைவிக்குக் கோபம் வந்தது. ''எத்தனை அழகான சைக்கிள்! அதை அலங்காரம் செய்து வைத்தால் புது மணப்பெண் போல இருக்குமே!'' அடித் தொண்டையில் கத்தத் துவங்கினாள் அவள்.

''உன்னுடைய எடுப்பார் கைப்பிள்ளைத்தனத்துக்கு ஒரு அளவே இல்லையா? சுயமாகச் சிந்திக்கவே மாட்டாயா? இப்படி தினம் ஏதாவது ஒன்றை அவன் சொன்னான் இவன் சொன்னான்



- வி. ஜெயலட்சுமி

என்று செய்துவிட்டு வருகிறாயே, உன்னை என்ன செய்தால் என்ன?'' சொல்லிவிட்டு கையில் கிடைத்ததை ஸுங் மேல் வீச லானாள். அவளிடமிருந்து தப்பினால் போதும் என்று மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க வீட்டை விட்டு ஒரே ஓட்டமாக ஓடித் தெருவுக்கு வந்தான்.

தெருவில் 'ஸெங்' என்பவன் இவனை கவனித்தான். ஸெங் இவனுடைய நெருங்கிய நண்பனல்ல, இருந்தாலும் இரு



வரும் பரிச்சயமானவர்கள். ஸுங் ஓடி வருவதைக் கண்டதும் ஸெங் அருகில் வந்து 'என்ன? ஏது?' என்று விசாரித்தான். விஷயத்தை அறிந்ததும், 'பூ இவ்வளவுதானா' என்று 'குபீர்' சிரிப்பொன்று சிரித்தான். மேற்கொண்டு தொடர்ந்தான் ஸெங்.

''நண்பா, இதற்குப் போயா கவலைப் படுகிறாய். நான் உனக்கு நல்லதொரு யோசனை சொல்கிறேன். அதன்படி செய்.''

''சொல்! சொல்! சீக்கிரம் சொல்!''

''இதோபார் ஸுங், நீ பேசாமல் இன்னொரு கல்யாணம் செய்துகொள். அதுதான் நல்ல வழி.''

''என்ன நண்பா யோசனை சொல்கிறேன் எனக் கூறி மேற்கொண்டு வம்பில் மாட்டிவிடப் பார்க்கிறாயே?''

''இது வம்பில்லை ஸுங். நீ இன்னொரு திருமணம் செய்துகொண்டால் என்ன நடக்கும் தெரியுமா? உன் இரு மனைவிகளும் அவர்களுக்குள் சண்டை போட்டுக்கொள்வார்கள். அந்தக் களேபரத்தில் உன்னுடன் தகராறு செய்ய எங்கே நேரம் இருக்கப்போகிறது? இரு பெண்கள் ஒற்றுமையாகப் பேசிக்கொள்வதாக உலகில் எங்காவது கேள்விப்பட்டிருக்கிறாயா?''

ஸெங்கின் யோசனை நன்றாகப்பட்டது ஸுங்குக்கு. உடனே பெண் தேடத் துவங்கினான். சீனாவில் பெண்ணுக்கா பஞ்சம்? கூடிய விரைவிலேயே மனைவி கிடைத்துவிட்டாள்.

ஆனால், என்ன செய்ய? நினைத்தது ஒன்று நடந்தது ஒன்று. மனைவியர் இருவரும் ஏதாவது வாக்குவாதம் செய்து தங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்வார்கள் என்று

பார்த்தால் இருவரும் சேர்ந்து ஸுங்கின் கண்ணில் விரலைவிட்டு ஆட்டினார்கள். இவர்கள் சண்டையை வேடிக்கை பார்த்துக் கொண்டு நண்பன் யோசனைப்படி



“நீயும் என்னுடன் இங்கு வந்து தங்கிவிட்டால் இருவரும் ஒன்றாக வாழலாமே என்ற எண்ணத்தில்தான் இரட்டை மனைவி யோசனையைச் சொன்னேன்.”

நிம்மதியாக இருக்கலாம் என்று எண்ணியவனுக்கு, முதுகில் இரட்டையடி கிடைத்தது. விஷயம் இத்தோடு நிற்கவில்லை. ஒரு நாள் இரு மனைவியருமாகச் சேர்ந்து இவனை வீட்டை விட்டே விரட்டி விட்டனர்.

நம் நாட்டில் முற்காலத்தில் ஊருக்கு ஊர் மக்கள் தங்க சத்திரங்கள் இருந்தது போல சீனாவிலும் ஊர்க் கோடியில் சத்திரங்கள் இருந்தன. அத்தகைய ஒரு சத்திரத்தில் தஞ்சம் புகுந்தான் ஸுங். மனது முழுவதும் சோகம். சத்திரத்தில் நுழைந்தவனுக்கு ஆச்சரியம்! அங்கே ஸெங் இருந்தான். ஸுங்கைக் கண்டதும் மலர்ந்த முகத்துடன் எழுந்து வரவேற்றான். ''நண்பா நீ எங்கே இங்கே?'' என்று கேட்ட ஸுங்குக்குப் பதில் சொல்ல ஆரம்பித்தான்.

''ஸுங்... வெகு நாட்களாக எனது வாசம் இந்தச் சத்திரத்தில்தான். எனது இரு மனைவியரால் விரட்டப்பட்டு இங்கேதான் வசித்து வருகிறேன். நண்பர் யாரும் இல்லாமல் வாடிக்கொண்டிருந்த போதுதான் உன்னைத் தெருவில் சந்தித்தேன். நீயும் என்னுடன் இங்கு வந்து தங்கிவிட்டால் ஒன்றாக இருக்கலாமே என்ற எண்ணத்தில் நான் இரட்டை மனைவி யோசனையைச் சொன்னேன். இப்போது நீயும் வந்துவிட்டாய். சீனப் பெண்கள் புத்திசாலிகள். கணவனை பொம்மலாட்டமாக ஆட்டி வைப்பதில் புலிகள். சரி எல்லாம் போகட்டும். எனக்கு இனிமேல் உன்னுடன் நன்றாகப் பொழுது போகும்...''

ஸெங் சொல்லச் சொல்ல ஸுங்குக்கு அழுகை அழுகையாய் வந்தது. சுயபுத்தியை அடகு வைத்துவிட்டு எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்ததற்கு இது சரியான தண்டனை என நினைத்து அழுதான்.



இந்த மாதம் சின்னதா செடி வளர்க்கலாமா? இன்றைக்கே வீட்டுக்குப் பக்கத்துல, சின்னதா ஒரு அடி ஆழம் குழி வெட்டுங்க. அதுல டேபிள் ரோஸ் விதையையோ அல்லது கடுகு, கொத்தமல்லி, கறிவேப் பிலை, துளசி ஏதேனும் ஒண்ணை கொஞ் சமா போட்டு தண்ணீர் ஊத்துங்க. தினமும் இதைச் செய்யுங்க. அடுத்த மாதம் செடியைப் பாருங்க. அது அழகா முளைச்சிருக்கும்.

நீங்க டேபிள்ரோஸ் வளர்த்தா அதை எடுத்து சாமிக்கு வைக்கலாம்.

கடுகு வளர குறைந்தது மூணு மாசம் ஆகும். ஆனா, ஒரு தடவைக்கு 50 கிராம் கடுகு எடுக்கலாம். கறிவேப்பிலை, கொத்து மல்லின்னா அம்மாவுக்குச் சமைக்க உதவும். தினமும் துளசி சாப்பிட்டா வயிறு சுத்தமா இருக்கும்!

- வி.பிரகாஷ், உறுப்பினர் எண் : 283,
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
பள்ளிப்பாளையம், நாமக்கல்

(இதுபோல் நீங்களும் ஏதேனும் ஓர் நற்செயல் குறித்து எழுதியனுப்புங்கள்.)

சந்தோஷம்!



உதவி!



நான் கடந்த 6, 7 மாதங்களாக கோகுலம் இதழைப் படித்து, துணுக்குகள், கவிதை, போட்டி விடைகள் இவற்றை அனுப்புகிறேன். என் அம்மாவும் வேலைக்குச் செல்வதால் அஞ்சலகத்துக் குச் சென்று எனது தபால்களை நானே அனுப்புகிறேன். அப்போது அங்கு வரும் படிக்காத சிலர் என்னைக் கூப்பிட்டு, ''பாப்பா, இந்தச் சீட்டில் உள்ள அட்ரஸை கவரில் எழுதிக்கொடு'' என்றும், ''எஸ்.பி. அக்கௌன்ட் எழுதிக்கொடு, எம்.ஓ. ஃபாரம் விண்ணப்பித்துக்கொடு'' என் றெல்லாம் கேட்பார்கள். நானும் மனப் பூர்வமாக உதவி செய்கிறேன்.

எனது வேலைகளையும் முடித்து விட்டு அஞ்சலகத்தைவிட்டு வெளியே வரும்போது பயனுள்ள ஒரு தொண்டினைச் செய்த மன நிம்மதியும், மகிழ்ச்சியையும் பெறுகிறேன். நீங்களும் இதுபோல் முடிந்தவரை உதவி செய் யுங்கள்!

- அ.க.சாய்சுதா, ஒன்பதாம்
வகுப்பு, ஸ்ரீரங்கம் பெண்கள்
மேல்நிலைப்பள்ளி, ஸ்ரீரங்கம்

சாதனைத் தளிர்கள்

பெரிய நகரம் முதல் குக்கிராமம் வரையிலுள்ள இளம் சாதனையாளர்களை வெளிச்சமிட்டுக் காட்டும் பகுதியிது! விளையாட்டு, பேச்சு, ஓவியம் என எதுவாக இருந்தாலும் சரி, அவற்றில் மாவட்ட அளவிலோ, மாநில அளவிலோ கலந்து கொண்டு பரிசு பெற்றிருந்தால் அது குறித்த விவரங்கள், புகைப்படம், சான்றிதழின் நகல் ஆகியவற்றை அனுப்புங்கள். சிறந்தவை வெளியாகும். கோகுலம் சார்பாகவும் அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசு அளிக்கப்படும்.

மறக்காமல் பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். முக்கியமான நிபந்தனை, அந்தச் சாதனை, கடந்த ஓராண்டுக்குள் நிகழ்த்தப்பட்டதாக இருக்க வேண்டும். பழையது வேண்டாம்!



அனுப்ப வேண்டிய முகவரி :
கோகுலம்,
சாதனைத் தளிர்கள்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.

முஞ்சிறை, அரசு மேல்நிலைப் பள்ளியில் பதினோராம் வகுப்பு படிப்பவர் பிரேம்குமார். சிறு வயது முதலே பேச்சு, பாட்டு, கட்டுரை போன்றவற்றில் ஆர்வமிக்கவர். 'குமரி முத்தமிழ் மன்றம்' நடத்திய வினாடி வினா போட்டியில் பங்கேற்று பரிசு பெற்றுள்ளார். தமிழக அரசு பொது நூலகத் துறையின் கட்டுரைப்






கோவை, ருக்மணி கண்ணன் வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படிப்பவர் ஸ்ரீவித்யா. ஓவியம், நடனம் என பல கலைகளைக் கற்றுத் தேர்ந்தவர். கோவை மாவட்ட அளவில் நடத்தப்பட்ட நடனப் போட்டியில்



நடன




GOVERNMENT OF TAMILNADU
DEPARTMENT OF PUBLIC LIBRARIES

READERS FORUM,
VILLAGE LIBRARY, PAINKULAM,
KANNIYAKUMARI DISTRICT.

CERTIFICATE

This certificate is awarded to A. Prem Kumar, Std. XI A, Government Higher Secondary School, Munchirai, for having won the First prize in the Essay Competition held on 11-11-2007 at Painkulam, in connection with the 40th National Library Week Celebration.

President,
Readers Forum,
Village Library, Painkulam



போட்டியிலும் முதல் பரிசு பெற்றுள்ளார். பிரேம் குமாருக்கு பலமான கர வொலி எழுப்புவோம்!

ப்லே பிரேம்!


மதுரை, இலக்குமி பள்ளியில் மூன்றாம் வகுப்பு படிப்பவர் ஆகாஷ். திறமையாக ஓவியம் வரைந்து அசத்துபவர். கடந்த ஆண்டு 'மும்பை கேமல் லிமிடெட்' நடத்திய அகில இந்திய ஓவியப் போட்டியில் பங் கேற்று 'குரூப் சி' பிரிவில் இரண்டாம் இடத்தைப் பிடித்து, பரிசும் சான் றிதழும் பெற்றுள்ளார். ஆகாஷ் தொடர்ந்து பல வெற்றிகளுடன் வலம் வர வாழ்த்துவோம்!



அசத்தல் ஆகாஷ்!

கிராமியக் கலையான 'கரகம்' ஆடி, அனைவரின் பாராட்டையும் முதல் பரிசையும் பெற்றுள்ளார். ஸ்ரீ வித்யா வருங்காலத் தில் நடனத்தில் சிறக்க வாழ்த்து வோம்!




Coimbatore District Sports & Games Welfare Association
TOURNAMENTS / SPORTS / COACHING CAMP AND CULTURAL ACTIVITIES
CERTIFICATE OF MERIT

NAME OF THE EVENT	Folk Dance
NAME OF THE PARTICIPANT	R.SRIVIDHYA
INSTITUTION	R.K.V. MHSS
CLASS STUDYING	V std
CATEGORY	[illegible]
PLACE SECURED	WINNER / FIRST / SECOND / THIRD / PARTICIPATION
DISTANCE COVERED	-
HEIGHT CLEARED	-
TIME CLOCKED	-

PLACE: COIMBATORE
DATE: 10/10/2007

வித்யா!

புதிர்கள்

இங்குள்ள கட்டங்களில் பாரத ரத்னா விருது பெற்ற பத்து பேரின் பெயர்கள் இடமிருந்து வலம், மேலிருந்து கீழாக உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்!

I. கட்டப் புதிர்

ல	இ	ட்	சு	அ	ன்	னை	தெ	ர	சா
மி	ந்	சி	ஜா	கி	ர்	உ	சே	ன்	வ
ப	தி	ர	சி	ம்	தே	வ்	வா	ஜ	ம்
மொ	ரா	ர்	ஜி	தே	சா	ய்	அ	வ	ளி
ப்	கா	ம	ரா	ஜ்	ரி	யா	அ	ஹ	தா
வி	ந்	க்	ஜீ	னே	ஷ்	வி	ரு	ர்	ரா
எம்	தி	பு	வ்	ம்	வி	வி	ள்	லா	ஜா
ஜி	ர	சை	கா	நா	ஜி	கி	ம	ல்	ஜி
ஆர்	சி	வ	ந்	கி	ளி	ரி	தி	நே	ம
ச	ர	ண்	தி	யா	தி	னே	ன்	ரு	த

- ந.க.பரமசிவம்,
சென்னை



II. பறிப்பதில் பாதி...!

வேலனுக்கு ஒரு எலுமிச்சைப் பழம் தேவைப் பட்டது. அதனால் அவன் ஒரு தோட்டத்துக்குச் சென்றான். அங்கு ஏழு காவலாளிகள் இருந்தனர். அவர்கள் அனைவரும் அவனிடம் "பறிப்பதில் பாதி பழங்களைத் தந்துவிட வேண்டும். அவையும் முழுப் பழங்களாக இருக்க வேண்டும்" என்றனர்.


காவலாளிகள் கூறியதற்கு அவன் ஒப்புக் கொண்டான். அப்படியென்றால், அவன் எவ்வளவு பழங்கள் பறித்திருப்பான்? எப்படிப் பங்கிட்டிருப்பான்...? கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்!

- பி.முகுந்தன்,
ஐந்தாம் வகுப்பு, சீதா தேவி கரோடியா பள்ளி, சென்னை



III. கணக்குப் புதிர்

1) 9 என்ற எண்ணை, மொத்தம் ஆறு



முறை பயன்படுத்தி, அவற்றைப் பெருக்கியோ, வகுத்தோ, கூட்டியோ விடை நூறு என்று வரச்செய்ய வேண்டும். உங்களால் முடிகிறதா என்று பாருங்கள்!

2) 37 என்ற எண்ணைப் பின்வரும் எண்களால் பெருக்கிடுவீர். அவ்வாறு பெருக்கினால் வரக்கூடிய விடைகள் உங்களுக்கு ஓர் ஆச்சரியத்தைக் கொடுக்கும்.

பெருக்க வேண்டிய எண்கள் :
3, 6, 9, 12, 15, 18, 21, 24, 27

- த.சி.பாலு, சென்னை

பறிப்பதில் பாதி...!

விடைகள் :

II. அவன் 128 பழங்களைப் பறிப்பான். முதலாமவனுக்கு 64, இரண்டாமவனுக்கு 32, மூன்றாமவனுக்கு 16, நான்காமவனுக்கு 8, ஐந்தாமவனுக்கு 4, ஆறாமவனுக்கு இரண்டும், ஏழாமவனுக்கு ஒன்றையும் தந்து மீதி ஒன்றை அவன் எடுத்துக்கொள்வான்.

III. 1) 999 - 99 = 900. இதை 9-ஆல் வகுக்கவும். 900/9 = 100

99 / 99 = 1. இதை 99-உடன் கூட்டவும். 1 + 99 = 100

2) 111, 222, 333, 444, 555, 666, 777, 888, 999


I. கட்டப் புதிர்



ல	இ	ட்	சு	அ	ன்	னை	தெ	ர	சா
மி	ந்	சி	ஜா	கி	ர்	உ	சே	ன்	வ
ப	தி	ர	சி	ம்	தே	வ்	வா	ஜ	ம்
மொ	ரா	ர்	ஜி	தே	சா	ய்	அ	வ	னி
ப்	கா	ம	ரா	ஜ்	சி	யா	அ	ஹ	தா
வி	ந்	க்	ஜீ	னே	ஷ்	வி	ரு	ர்	ரா
எம்	தி	பு	வ்	ம்	வி	வி	ள்	லா	ஜா
ஜி	ர	சை	கா	நா	ஜி	கி	ம	ல்	ஜி
ஆர்	சி	ல	ந்	கி	னி	ரி	தி	தே	ம
[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]

- ஆப்கானிஸ்தானில் ரயில்கள் இல்லை
- ஆப்பிரிக்காவில் புலிகள் இல்லை
- ஆஸ்திரேலியாவில் கரடிகள் இல்லை
- ஆண் கொசுக்கள் கடிப்பதில்லை
- சந்திரனில் வாயு மண்டலம் இல்லை
- சவுதி அரேபியாவில் நதிகள் இல்லை
- யமுனை நதி கடலில் கலப்பதில்லை
- ஈக்களுக்குப் பற்கள் இல்லை
- ஈசலுக்கு வயிறு இல்லை

- க.பிரகஸ்யா,
ஒன்பதாம் வகுப்பு,
உ.எண் : 318,
பொன்னையா
இராமஜெயம்
பொதுப் பள்ளி,
தஞ்சாவூர்





இல்லை... இல்லை...



● கல்பனா சாவ்லா

+ உச்ச நீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதி - ஃபாத்திமா பீவி
+ முதல் ஐ.பி.எஸ். பெண் அதிகாரி - கிரண் பேடி.
+ எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் இளைய பெண் - பச்சேந்திரி பால்.
+ முதல் பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரி - அன்னா ராஜன் ஜார்ஜ்.
+ முதல் பெண் மருத்துவர் - ஆனந்தி பாய் ஜோஷி.
+ முதல் பெண் தூதுவர் - விஜயலஷ்மி பண்டிட்.
+ ஐ.நா. சபையின் முதல் பெண் தலைவர் - விஜயலஷ்மி பண்டிட்.
+ முதல் பெண் பிரதமர் - இந்திரா காந்தி.
+ விண்வெளி சென்ற முதல் இந்தியப் பெண் - கல்பனா சாவ்லா.
+ ஆங்கில கால்வாயை கடந்த முதல் பெண்மணி ஆர்த்தி சகா.
+ நோபல் பரிசினை பெற்ற முதல் பெண்மணி அன்னை தெரசா.
+ புக்கர் விருது பெற்ற முதல் இந்தியப் பெண்மணி அருந்ததி ராய்.

● கிரண் பேடி



லேடீஸ் ஃபஸ்ட்!

- ம.சுந்தரலெட்சுமி,
உ. எண் : 404, மதுரை



அட!



திருக்குறள் பற்றிய அரிய செய்திகள்:

✸ திருக்குறள் முதல் எழுத்தான 'அ'வில் தொடங்கி கடைசி எழுத்தான 'ன்'ல் முடிவடைகிறது.

✸ திருக்குறளில் தலைப்பு நீங்கலாக 40,900 எழுத்துகள் உள்ளன.

இவற்றில் உயிர் எழுத்துகள் = 13,074
மெய் எழுத்துகள் = 12,729
ஆய்த எழுத்து = 50

✸ 122-வது அதிகாரத்தைத் தவிர, மீதி எல்லா அதிகாரத்திலும் 'அ' என்ற எழுத்து உள்ளது.


✸ திருக்குறளில் பயன்படுத்தப்படாத எழுத்து 'ஔ'

✸ மிகப் பெரிய குறள் 957வது குறள். இதில் உள்ள எழுத்துக்கள் 39.



- பி.கௌதமன்,
உறுப்பினர் எண் : 352,
எட்டாம் வகுப்பு,
ஏ.ஆர்.ஆர். மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
கும்பகோணம்

'தசா' சார்லஸ்!



1. 'நவீன கம்ப்யூட்டரின் தந்தை' எனக் குறிப்பிடப்படுபவர் **சார்லஸ் பாப்பேஜ்.**

2. வாகனங்களுக்குப் பயன்படுத்தப்படும் டயரைக் கண்டுபிடித்தவர் **சார்லஸ் குட்இயர்.**

3. காந்திஜியுடன் பணியாற்றிய 'தீனபந்து' என அழைக்கப்பட்டவர் **சார்லஸ் எஃப். ஆண்ட்ரூஸ்.**

4. பூமி அதிர்ச்சியை அளக்க உதவும் ரிக்டர் அளவு ஸ்கேலைக் கண்டுபிடித்தவர் **சார்லஸ் எஃப். ரிக்டர்.**

5. உலகின் முதல் பாதாள ரயில் பாதையை அமைத்தவர் **சார்லஸ் பென்சன்.**

6. சர்வதேச திரைப்படத்தில் தோன்றிய முதல் காமெடி நடிகர் **சார்லஸ் ஸ்பென்சர் சாப்ளின்.**

7. அட்லாண்டிக் கடலை குறுக்கே முதன் முதலில் விமானத்தில் கடந்தவர் **சார்லஸ் எ.லிண்ட்பர்க்.**

8. 'எ டேல் ஆஃப் டூ சிட்டீஸ்' என்ற உலகப் புகழ்பெற்ற நூலை எழுதியவர் **சார்லஸ் டிக்கன்ஸ்.**

9. உயிர்களின் பரிணாமக் கொள்கையைக் கண்டுபிடித்தவர் **சார்லஸ் டார்வின்.**

10. 'வாட்டர் பேபி' என்ற காமிக் கதாபாத்திரத்தை உருவாக்கியவர் **சார்லஸ் கிங்ஸ்லி.**

- அ.அனீஸ் ஃபாத்திமா, உ. எண் : 34, பத்தாம் வகுப்பு, எஸ்.ஏ.பி.மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, உத்தமபாளையம்

வெட்டுங்க! ஒட்டுங்க!!



உங்களின் திறமைக்கு ஒரு சவால்! இதை கொஞ்சம் கவனமாக, சிரத்தை யுடன் செய்ய வேண்டும். 26ஆம் பக்கத்தில் ஒரு சிறுவன் படுக்கை அறையில் இருப்பது போன்ற படம்



உள்ளது. எதிர்ப் பக்கத்தில் அவனது ஆடையும், அந்த அறையிலுள்ள சில பொருட்களும் தனித் தனியாக கொடுக் கப்பட்டுள்ளது.

நீங்கள் அவற்றை சரியாக வெட்டி யெடுத்து 26ஆம் பக்கத்துப் படத்தில் கச்சிதமாக ஒட்ட வேண்டும். இதோ, இங்கே ஒட்டப்பட்ட முழுமையான படம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனை ஒருமுறை பார்த்துக்கொள்ளுங்கள்.

பிறகு, 26ஆம் பக்கம் சென்று உங் கள் திறமையைக் காட்டுங்கள். படங் களை வெட்டியெடுக்க கத்திரியையோ, பிளேடையோ பயன்படுத்துகையில் காயம் ஏற்படாத வகையில் எச்சரிக்கை யாக செயல்படுங்கள்.

ஆல் தி பெஸ்ட்!

அன்பு நண்பர்களே...

'கோகுலம் எக்ஸ்பிரஸ்' பகுதிக்கு கதை, கவிதை, அறிவியல் துணுக்குகள், புதிர்கள், சுற்றுலா அனுபவம், பள்ளி மற்றும் வீட்டில் நடந்த பல்சுவை அனுபவங்களை எழுதியனுப்புங்கள். படைப்புகளுடன் உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாக குறிப்பிட வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர் - கோகுலம்
(எக்ஸ்பிரஸ் பகுதி)
47-NP., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

படைப்புகளை அனுப்புங்கள்; பங்கேற்று அசத்துங்கள்!

குழந்தைக் கவிஞர்



மொத்தப் பரிசுத்
தொகை ரூ.2000/-
முதல் பரிசு ரூ.1000/-
இரண்டாம் பரிசு ரூ.500/-
மூன்றாம் பரிசு ரூ.500
(ரூ.250/- வீதம் இருவருக்கு)

அழ.வள்ளியப்பா

நினைவுச் சிறுகதைப் போட்டி 2008

சிறுவர் இலக்கியத்துக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்ட குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா நினைவாக இவ்வாண்டும் சிறுகதைப் போட்டி நடத்தப்படுகிறது. கலந்து கொண்டு சிறப்பியுங்கள்.

நிபந்தனைகள் :

- இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் (+ 2 வரை) மட்டுமே கலந்துகொள்ள முடியும். ஆகவே போட்டிக்குக் கதையை அனுப்புவோர், கண்டிப்பாக படிக்கும் வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியைக் குறிப்பிட வேண்டும்.

- கதைகள் சிறுவர்களுக்கு ஏற்ற வகையில் இருக்க வேண்டும். சமூகம், நகைச்சுவை, துப்பறிதல் என்று எந்த வகையாகவும் இருக்கலாம். உங்கள் சொந்தக் கற்பனைதான் என்ற உறுதிமொழி கடிதத்தைக் கதையுடன் இணைக்க வேண்டும்.

- பிரசுரத்துக்குத் தேர்வாகாத கதையைத் திருப்பி அனுப்ப இயலாது. ஆகவே, தபால் தலைகளை இணைக்க வேண்டாம். ஒருவரே எத்தனை கதைகளை வேண்டுமானாலும் அனுப்பலாம்.

- அயல்நாட்டில் வசிப்பவர்கள் இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியை அளிக்க வேண்டும். கதைகளை முதல்முறை வெளியிடும் உரிமை கோகுலத்துக்கே. பிறகு இதன் உரிமை கதாசிரியரைச் சாரும்.

- போட்டி முடிவு வெளியாகும் வரை கடிதப் போக்குவரத்தோ, விசாரிப்போ கூடாது. போட்டி குறித்து எழும் பிரச்னைகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஆசிரியர் அளிக்கும் தீர்ப்பே இறுதியானது.

- முடிவுத் தேதி: 31.7.2008

அனுப்ப வேண்டிய
முகவரி:
ஆசிரியர், கோகுலம்
அழ.வள்ளியப்பா நினைவுச்
சிறுகதைப் போட்டி - 2008
47-NP, **ஜவாஹர்லால் நேரு சாலை,**
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032


வயது முதிர்ந்த ஒருஞானி
வாழ்வை வென்ற நிறைவோடு
சீடர் சூழ அயர்ந்திருந்தார்
சிந்தனை செய்து படுத்திருந்தார்!

அண்டி நின்ற சீடர்களோ
''அய்யா எமக்கு உபதேசம்
அருள வேண்டும்'' எனக் கேட்டு
அடிகள் பணிந்து நின்றார்கள்!

''உய்ய உமக்கு உபதேசம்
ஒன்று நானும் சொல்கின்றேன்
பைய்ய எந்தன் வாய்க்குள்ளே
பார்ப்பீர்!'' என்று வாய் திறந்தார்!

பார்த்த சீடர் பரவசத்தில்
''பார்த்தோம்! புரிந்தோம்!'' என்றனரே!
''என்ன பார்த்தீர்? புரிந்தீர்கள்?''
என்று ஞானி கேட்டாரே!

''உங்கள் வாய்க்குள் பல்லொன்றும்
உள்ளே இல்லை என்றாலும்
நாக்கு மட்டும் நலமாக
நாங்கள் கண்டோம்!'' என்றார்கள்.



பற்கள்



கதைப் பாடல்

வளர்கவி

''அதிலே இருந்து நீங்களெல்லாம்
அறிந்து கொண்டது என்னவென்று
பதிலாய்ச் சொல்வீர்'' என்றந்தப்
பழுத்த ஞானி தான்கேட்டார்.

''உறுதி காத்த பற்களெல்லாம்
உதிர்ந்துவிட்டன நில்லாமல்,
வளைந்து கொடுத்த 'நா' மட்டும்
வாழ்கிற தின்னும் வளமாக!

உலகில் வளைந்து கொடுப்பவரே
ஊழிக் காலம் வாழ்வார்கள்
முரண்டு பிடிக்கும் மக்களெல்லாம்
முகவரி இன்றித் தொலைவார்கள்!'

என்று சீடர் சொல்லியதை
ஏற்றுப் புன்னகை பூத்துவிட்டு
''இதுவே எந்தன் உபதேசம்
ஏற்று நடப்பீர்'' எனச் சொன்னார்!

சொல்லும் பாடம்!

கிராமியக் கலைகள் - 6

வில்லுப்

ரஞ்சனின் சித்தப்பா அடக்கமுடியாமல் சிரித்துவிட்டார்.

அதற்கு சற்று முன்னர்தான் அவர், ரஞ்சனை ஒரு கேள்வி கேட்டிருந்தார். ''ரஞ்சன், 'வில்'னா என்னான்னு உனக்குத் தெரியுமில்லையா?''

தமிழ்ச்செல்வியின் முகத்தில் பிரகாசம். ''எனக்குத் தெரிஞ்சுடுச்சு, நீங்க எதுக்காக இந்தக் கேள்வியைக் கேட்கறீங்கன்னு'' என்றாள்.

ரஞ்சனுக்கு வேடிக்கையாக இருந்தது. 'இதென்ன பெரிய கேள்வி' உடனடியாக பதிலைச் சொன்னான். ''நாம இறந்த பிரகு நம்ம சொத்து யார் யாருக்கு எப்படிப் போகணும்னு எழுதி வைக்கறதுதான் வில்.''

இந்தப் பதில்தான் சித்தப்பாவுக்குச் சிரிப்பை வரவழைத்தது. ''நான் 'வில்' என்கிற ஆங்கில வார்த்தைக்கு அர்த்தம் கேட்கவில்லை. தமிழ் வார்த்தைக்குதான் அர்த்தம் கேட்டேன்'' என்றார்.



பாட்டு!

அருணா சரண்யா

தமிழ்ச்செல்வியால் அதற்குமேல் பொறுமையாக இருக்க முடியவில்லை. ''ராமர், அர்ஜுனரெல்லாம் கையிலே வச்சிருப்பாங்களே அந்த வில்'' என்று கூறினாள்.

'அட ஆமாம். தனக்கு ஏன் இது முதலிலேயே தோன்றவில்லை?' அசடு வழிந்தாலும் அதை அடக்கிக் கொண்டு, ''இருக்கட்டும். இப்போ அந்த வில்லுக்கு என்ன வந்தது?'' என்றான் ரஞ்சன் மிடுக்குடன்.

''ஏன்னா, இன்னைக்கு சாயங்காலம் நாம ஒரு வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்குப் போகப் போறோம்'' என்றார் சித்தப்பா.

அவர்கள் உள்ளே நுழைவதற்கும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி தொடங்குவதற்கும் சரியாக இருந்தது.

''தந்தனத்தோம் என்று சொல்லியே-வில்லினில் பாட வந்தருள்வாய் கணபதியே'' என்று மேடையின் நடுவில் உட்கார்ந்திருந்தவர் பாடிக்கொண்டிருக்க, சுற்றிலும் இசைக் கலைஞர்கள் இசை எழுப்பினர். ஒருவர் கையில் தாளம் இருந்தது. இன்னொருவர் கையில் இரண்டு சிறிய கட்டைகள் இருந்தன. மூன்றாமவர் கையில் கடம் இருந்தது. நான்காமவர் உடுக்கையை வைத்துக்கொண்டிருந்தார்.

''பின் வரிசையிலே இருக்கும் ஒருத்தர் மட்டும் எந்த இசைக் கருவியும் இல்லாமல் இருக்கிறாரே. அவருக்கு என்ன வேலை?'' என்று ரஞ்சன் கேட்க, ''கவனிச்சுப் பாரு உனக்கே தெரிஞ்சிடும்'' என்றார் சித்தப்பா.

சீக்கிரமே அதற்கான விடை ரஞ்சனுக்குத் தெரிந்தது. அவர் பின் பாட்டு பாடிக்கொண்டிருந்தார். நடுநடுவே கேள்விகளும் கேட்டுக்கொண்டிருந்தார்.

''நம்ம மாணிக்கம் காட்டு வழியே போய்க்கொண்டிருந்தானா?'' என்று முக்கிய பாட்டுக்காரர் கேட்க, ''ஆமாம், போய்க்கிட்டிருந்தான்'' என்றார் பின் பாட்டுக்காரர்.

''அவன் மனசிலே பயம் இல்லே. கட்டபொம்மன் ஆட்சி செய்யும் சீமையிலே யாருக்காவது பயம் இருக்குமா?'' என்று பாட்டுக்காரர் கேட்க, ''எப்படி இருக்கும்? பூனை, எலிக்குக்கூட பயம் இருக்காதே'' என்றார் பின்பாட்டுக்காரர்.

நிகழ்ச்சி சுவையாகப் போய்க்கொண்டிருந்தது. பாடகரின் தலைப்பாகை ரஞ்சனைக் கவர்ந்திழுத்தது. அதைவிட முக்கியமாக அவனைக் கவர்ந்தது, அவருக்கு எதிரே வைக்கப்பட்டிருந்த வில். அந்த வில்லின் 'நாண்' மேற்புறமாக வைக்கப்பட்டிருந்தது. அதில் சில மணிகள் தொங்கவிடப்பட்டிருந்தன. பாடகர் பாடிக்கொண்டே தம் கையில் இருந்த இரண்டு சிறு கோல்களால் அந்த நாணை மாற்றி மாறித் தட்ட, அதில் இருந்த மணிகளிலிருந்து அழகாக இசை எழும்பியது.

கதை சுவாரஸ்யமாக இருந்தது. காட்டு வழியில் ஒரு திருடன் வருவதுபோலவும், மாணிக்கம் பயப்படாமல் அவனோடு சண்டையிடுவதாகவும், திருடன் வேடத்தில் வந்த வீரபாண்டிய கட்டபொம்மன் மாணிக்கத்தின் வீரத்தைப் பாராட்டுவதாகவும் கதை முடிந்தது.

பாடல்கள் மூலம்தான் கதையைச் சொன்னார். பாடல்களே எளிமையாகத்தான் இருந்தன. இருந்தாலும் நடுநடுவே பேச்சு



வழக்கிலும் கதையை விளக்கினார். அத்துடன் நிறைய ஒழுக்க நெறிகளையும் வலியுறுத்தினார்.

ரஞ்சனின் காதுகள் இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தாலும் அவன் பார்வை மேடையிலிருந்த அந்த அழகான வில்லின் மீதே பதிந்திருந்தது.

"இந்த வில்லை எதனாலே செஞ்சிருக்காங்க?" என்று கேட்டான்.

"பனங்கம்பு அல்லது மூங்கிலால் செய்திருப்பாங்க" என்று கூறினார் சித்தப்பா.

மூன்று மணிநேரம் போனதே தெரியவில்லை. நிகழ்ச்சி முடிந்ததும் எல்லோரும் கைதட்டினர். மற்றவர்களெல்லாம் கைதட்டலை நிறுத்திய பிறகும்கூட ரஞ்சன் தொடர்ந்து கைதட்டிக் கொண்டிருந்தான்.

பாடகர் பாடிக்கொண்டே தம் கையில் இருந்த இரண்டு சிறு கோல்களால் அந்த நாணை மாறிமாறித் தட்ட, அதில் இருந்த மணிகளிலிருந்து அழகாக இசை எழும்பியது.

துளிகள்...

* வில்லுப்பாட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் முதலில் புகழ்பெற்றது என்பார்கள்.

* முதலில் விநாயகர் குறித்த காப்பு, அடுத்தது குரு வணக்கம், அதற்கடுத்து அந்தப் பகுதியில் உள்ள தெய்வங்களுக்கு வணக்கம், பிறகு அவையடக்கம் ('இதையெல்லாம் பாடுவதற்கு எனக்குத் தகுதியில்லை. இருந்தாலும் கடவுள் அருளால் உங்கள் முன்னால் பாடுகிறேன்' என்பதுபோல பாடுவது) பாடுவர்.

* கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாறை வில்லுப்பாட்டில் திறமையாகக் கூறியிருக்கிறார்.

* வழிவழியாக கூறிவரும் சரித்திரக் கதைகளைத்தான் வில்லுப்பாட்டில் பாடுவது வழக்கம். தெய்வங்கள் மற்றும் அரசர்களின் வரலாறுகளையும் கூறுவதுண்டு!


சிக்கியது யார்?
ஒரு நாள் -
அட! வேட்டைக்கார கிட்டு!
ஹலோ...
நான் கிட்டு பேசறேன். கோமு இல்லையா?
கோமு, கிட்டு லைன்ல இருக்கான்.
கொடு! கொடு!
ஹலோ!
கோமு, யானையைப் பிடிக்க குழி ரெடி. எப்ப வேணும்னாலும் யானை சிக்கலாம்.


... சீக்கிரம் 'டிரக்'கை அனுப்பி வை!
ஆ... யம்மாடி.!
கோ... கோழு டிரக் வேணாம்!
ஏன்? என்ன ஆச்சு?
டிரக்குக்கு பதிலா ஆம்புலன்ஸை அனுப்பு.
என்ன சொல்றே?
யானை சிக்கலே... யானைகிட்டே நான் சிக்கிக்கிட்டேன்!

கோகுலம் சிறுவர் சங்கம்

'கோகுலம் சிறுவர் சங்கம்' பட்டியல் இந்த மாதமும் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!

பட்டியல்



551) கே.ஆர்.பிரசன்ன அரவிந்த், நான்காம் வகுப்பு, சீதாதேவி கரோடியா மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை

552) ஆர்.சுரேன், மூன்றாம் வகுப்பு, ஸ்பார்டன் மெட்ரிக் பள்ளி, சென்னை

553) தே.ச.யாழினி, எட்டாம் வகுப்பு, புனித பேட்ரிக் மேல்நிலைப் பள்ளி, புதுவை

554) கா.கதிர்வேல்பாண்டி, ஒன்பதாம் வகுப்பு, ஜோதி உயர்நிலைப் பள்ளி, நதிக்குடி

555) ஏ.சுவேதா புஷ்பா, ஒன்பதாம் வகுப்பு, ஜோசப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திண்டுக்கல்

556) சு.ஜோதி வெங்கடேஸ்வரன், ஆறாம் வகுப்பு, ஸ்ரீவித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, இராசிபுரம்

557) ந.அமிர்தஸ்ரீ, பத்தாம் வகுப்பு, நாய்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மதுரை

558) தே.ச.அமிழ்தன், மூன்றாம் வகுப்பு, ஆதித்யா வித்யாஷ்ரம், புதுவை

559) ம.ரத்னதுளஸி, பத்தாம் வகுப்பு, செயின்ட் அன்னாஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருச்சி

560) தி.காளீஸ்வரன், எட்டாம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, செந்நெல்குடி

561) எஸ்.ராமநாராயணன், ஒன்பதாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, அ.கலையம்புத்தூர்

562) பி.ஸ்டெபினா, பத்தாம் வகுப்பு, அமுதம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மதுரை

563) எஸ்.சைலேஷ், மூன்றாம் வகுப்பு, ஸ்ரீவகீலா வித்யாஷ்ரம், திருச்சி

564) க.பா.ஹரிணி, ஆறாம் வகுப்பு, எஸ்.சி.எஸ். மேல்நிலைப் பள்ளி, சிட்லபாக்கம்

565) ஜி.அசோக், பத்தாம் வகுப்பு, ஜோதி மேல்நிலைப் பள்ளி, ராஜபாளையம்

566) க.வைபவி சர்மா, ஐந்தாம் வகுப்பு, சேது பாஸ்கரா மேல்நிலைப் பள்ளி, சென்னை

567) எம்.சாய்சங்கர், ஐந்தாம் வகுப்பு, டி.ஏ.வி. பொதுப் பள்ளி, வேளச்சேரி

568) பா.தர்ஷிணி, பன்னிரண்டாம் வகுப்பு, சி.சி.எம். மேல்நிலைப் பள்ளி, இடையன்குடி

569) க.பூவரசன், ஆறாம் வகுப்பு, புனித அன்னாஸ் மேல்நிலைப் பள்ளி, சென்னை

570) ஜெ.அருண்பிரகாஷ், பத்தாம் வகுப்பு, ஸ்ரீவாகீஸ்வரி வித்யா மந்திர், பொன்னாச்சியூர்

571) பி.காவ்யா, பத்தாம் வகுப்பு, ஜேசீஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, ஈரோடு

572) என்.அஜீத் மனோஜ், பதினொராம் வகுப்பு, அன்னை மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, வள்ளியூர்

573) ஜெ.அகிலா, நான்காம் வகுப்பு, ஸ்ரீ இராமகிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கோவை

574) ஆ.பிரசாந்த், ஏழாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, முஞ்சிறை

575) செ.கார்த்திகா, பத்தாம் வகுப்பு, டி.ஏ.வி. பெல் மேல்நிலைப் பள்ளி, இராணிப்பேட்டை

578) த.பாரத், ஆறாம் வகுப்பு, யாகப்பா மெட்ரிகுலேஷன் பள்ளி, தஞ்சாவூர்

577) டி.ஆர்.ரெங்கதேவா, நான்காம் வகுப்பு, புஷ்பலதா மெட்ரிக் பள்ளி, திருநெல்வேலி

578) ரா.கிருத்திகா, எட்டாம் வகுப்பு, பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருவரங்கம்.

579) கி.மகேந்திரன், ஐந்தாம் வகுப்பு, சேனைத் தலைவர் சமுதாய நடுநிலைப் பள்ளி, வாசுதேவநல்லூர்

580) ரா.கிருத்திகா, ஒன்பதாம் வகுப்பு, கொங்கு கல்வி நிலையம், ஈரோடு

581) எஸ்.அஜின், பன்னிரண்டாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, முஞ்சிறை

582) என்.ரேவதி பிரிதர்ஷிணி, எட்டாம் வகுப்பு, ஜெயகோபால் கரோடியா ஹிந்து வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை

583) ஜெ.தினேஷ்ராஜ், ஐந்தாம் வகுப்பு, ஸ்ரீநாச்சியார் மெட்ரிகுலேஷன் பள்ளி, சவுரியூர்

584) எஸ்.டேப்போடில்டிக்ஸி, மூன்றாம் வகுப்பு, விக்டரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மைலோடு

586) என்.லோகேஷ்வர், ஏழாம் வகுப்பு, பெத்தி செமினோர் மேல்நிலைப் பள்ளி, புதுச்சேரி

587) எஸ்.சுபலட்சுமி, நான்காம் வகுப்பு, தாகூர் வித்யாலயம் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, மதுரை

588) த.பிரகாஷ்ராஜ், முதலாம் வகுப்பு, ஞானாம்பிகா உதவி தொடக்கப் பள்ளி, வடகாடு

589) சா.ஜோஸ்பின் சாதனா, பத்தாம் வகுப்பு, கமலாவதி மேல்நிலைப் பள்ளி, ஆறுமுகநேரி

590) த.அரவிந்தன், ஐந்தாம் வகுப்பு, ஞானாம்பிகா உதவி தொடக்கப் பள்ளி, வடகாடு

591) ரா.சுவாதிபிரியா, பத்தாம் வகுப்பு, பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருவரங்கம்

592) ஆர்.திலீபன், நான்காம் வகுப்பு, ஸ்ரீவாசவி வித்யாலயா மெட்ரிக் பள்ளி, இராசிபுரம்

593) ப.மா.பிரதீபா, எட்டாம் வகுப்பு, யு.ஆர்.சி. பழனியம்மாள் பள்ளி, ஈரோடு



கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

புகைப்படம்

வீட்டு முகவரி : ....

....

....

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

594) எஸ்.முரளிகிருஷ்ணன், எட்டாம் வகுப்பு, ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி வித்யாலயா, திருச்சி

595) இரா.முத்துகுமார், எட்டாம் வகுப்பு, எஸ்.பி.ஓ.ஏ. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை

596) இசிட்டா ஆஸ்லி, ஏழாம் வகுப்பு, புனித லூர்தன்னை மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, பொள்ளாச்சி

597) ம.லோகேஷ், பன்னிரண்டாம் வகுப்பு, ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, செவ்வாப்பேட்டை



598) வி.ஹரிணிமீரா, நான்காம் வகுப்பு, எஸ்.எப்.எஸ்.மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, புதுகை

599) என்.ஆகாஷ்ராம், ஐந்தாம் வகுப்பு, ஜெயகோபால் கரோடியா ஹிந்து வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை

600) தி.சுப்ரதீஷ், ஒன்பதாம் வகுப்பு, குளூனி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, போளூர்

ஹலோ, டாக்டர் ஸ்பீக்கிங் - 6


ஹலோ, கோகுலம் குட்டீஸ்! நலமா இருக்கீங்களா? இந்த மாதம் 'எக்ஸ்-ரே' பற்றித் தெரிஞ்சுக்குவோமா?

'எக்ஸ்-ரே' என்பது ஒரு வகை மின்காந்தக் கதிர்வீச்சு. அணுக்களில் உள்ள 'எலெக்ட்ரான்'களின் இடப்பெயர்வால் உண்டாக்கப்படும் மிகமிகக் குறைந்த அலைநீளம் கொண்ட மின்காந்தக் கதிர்வீச்சை 'எக்ஸ்-ரே' என்கிறோம்.

இந்த 'எக்ஸ்-ரே' கதிர்வீச்சை ஒரு இயந்திரம் உண்டாக்குகிறது. அந்த இயந்திரத்தில் எக்ஸ்-ரே குழாய், டங்ஸ்டன் மின்னிழை, சுழலும் நேர்மின்வாய், எதிர்மின்வாய் என்று பல பகுதிகள் உள்ளன. இவை எல்லாமே காரீயத்தால் செய்யப்பட்ட பாதுகாப்பான குழாய்க்குள் அமைந்துள்ளன.

இதன் மின்னிழையை மின்னூட்டத்தால் சூடேற்றும்போது, எதிர்மின்வாயிலிருந்து மின்னணுக்கள் பொங்கி வருகின்றன. அப்போது நேர்மின்வாய்க்கும் எதிர்மின்வாய்க்கும் இடையில் உள்ள உயர் மின்னழுத்தத்தின் விளைவாக, மின்னணுக்கள் நேர்மின்வாயை நோக்கி வேகமாகப் பாய்கின்றன. அதிக வெப்பத்தைத் தவிர்ப்பதற்காக நேர்மின்வாய் சுழல்கிறது. அப்போது நேர்மின்வாயின் இலக்குப் பாதையை மின்னணுக்கள் தொட்டவுடன் 'எக்ஸ்-கதிர்கள்' வெளிப்படுகின்றன.

வெல்டன் ராண்ட்ஜென்!



சரி, இந்த எக்ஸ் கதிர்களைக் கண்டுபிடித்தவர் யார்? **வில்ஹெம் கான்ராட் ராண்ட்ஜென்.** இவர் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த இயற்பியலாளர். 1845, மார்ச் 27ஆம் நாள் 'லென்னப்' எனும் சிறு நகரத்தில் பிறந்த ராண்ட்ஜென், இயற்பியல் பட்டம் பெற்றார். 1869ல் 'ஸூரிச்' பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றபின், உலகின் தலைசிறந்த ஆராய்ச்சியாளர்களில் ஒருவராக மாறினார்.

அப்போது பல விஞ்ஞானிகள் செய்த ஆய்வுகளின் பலனாக 'கேத்தோட் கதிர்கள்' பிரபலமாகியிருந்தன. குறிப்பாக, இங்கிலாந்து விஞ்ஞானி வில்லியம் குருக்ஸ் என்பவர் ஒரு மின்னோட்டக் குழாயைக் கண்டுபிடித்திருந்தார். அதற்குக் 'குருக்ஸ் குழாய்' என்று பெயர். இதனுள் ஒரு

மின்னிழை, எதிர்மின்வாய், நேர்மின்வாய் இருக்கும். ஆனால் காற்று இருக்காது. வெற்றிடம் மட்டுமே இருக்கும். இக்குழாயில் அதிக மின்னழுத்தத்தில் மின்னிழைக்கு மின்னோட்டத்தைச் செலுத்தினால், எதிர்மின்வாயிலிருந்து நேர்மின்வாய்க்கு சில கதிர்கள் பாய்ந்து குழாயை ஒளிரச் செய்யும். இந்தக் கதிர்களை 'கேத்தோட் கதிர்கள்' என்று அவர் சொல்லியிருந்தார்.

இது எப்படி நிகழும் என்று ராண்ட்ஜென் ஆராய முற்பட்டபோது தற்செயலாகக் கண்டுபிடித்ததுதான் எக்ஸ் கதிர்கள்!



✱ ராண்ட்ஜென்

அது 1895ஆம் ஆண்டு, நவம்பர் 8ஆம் நாள். ராண்ட்ஜென் 'குருக்ஸ் குழாயை'ச் சுற்றிலும் கனமான கறுப்புப் பலகையால் மூடி துளியும் ஒளி புகாதவாறு செய்தார். ஆய்வுக் கூடத்தையும் கனமான திரைச்சீலைகளால் மூடி இருட்டாக்கினார். இப்போது மின்னோட்டத்தைச் செலுத்தினார். கேத்தோட் கதிர்கள் வெளிப்பட்ட பாதையில் இருந்த ஒரு சிறு தட்டு தகதகவென மின்னியது. அத்தட்டை சில மீட்டர்கள் தள்ளி வைத்தால்கூட அதில் மினுமினுப்பு உண்டானது. அத்தட்டில் 'பேரியம் பிளாட்டினோ சயனைடு' என்ற வேதிப்பூச்சு காணப்பட்டது. ஆகவே கேத்தோட் கதிர்கள் பாதையில் வேதிப்பூச்சுள்ள பொருளை நீட்டினால், புதுவித கதிர்கள் உருவாகின்றன என்று கண்டுபிடித்தார். ஆனால் அவை என்ன கதிர்கள் என்று அவருக்கு விளங்கவில்லை. இருந்தாலும் தம் ஆராய்ச்சியைத் தொடர்ந்தார்.

✱ உலகின் முதல் எக்ஸ்-ரே



இப்போது கதிர்கள் பாயும் பாதைக்கும் அத்தட்டுக்கும் நடுவில் புத்தகம் மற்றும் மரப்பலகையை வைத்தார். தட்டில் மினுமினுப்பு மாறவில்லை. அடுத்து காரீயம் மற்றும் பிளாட்டினத் தகடுகளை வைத்தார். அப்போதுதான் அந்த ஆச்சரியம் நிகழ்ந்தது. மினுமினுப்பு உண்டான தட்டில் இப்போது காரியத் தகட்டின் நிழலும் தம்முடைய விலா எலும்புகளும் தெளிவாகத் தெரிந்தன.

அப்போது அந்தப் பக்கமாக வந்த மனைவி 'பெர்தா'வின் கையை கதிர்வீச்சுப்




பாதையில் புகுத்தி, அப்போது உருவான பிம்பத்தை ஒரு புகைப் படச் சுருளில் பதித்து, படமாக 'டெவலெப்' செய்தார். ராண்ட்ஜெனுக்கு ஆச்சரியம்! அந்தப் படத்தில் தம்முடைய மனைவியின் கை எலும்புகளும் அவர் அணிந்திருந்த மோதிரமும் தெளிவாகத் தெரிந்தன. அதேசமயம் கைப் பகுதி சதைகள் மட்டும் தெளிவில்லாமல் தெரிந்தன. இதுதான் உலகில் முதன் முதலில் பதிவான எக்ஸ்-ரே படம்.

ராண்ட்ஜென் தாம் கண்டுபிடித்த கதிர்களுக்கு சரியான விளக்கம் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் 'எக்ஸ் கதிர்கள்' என்று பெயரிட்டார். அவருடைய இந்தக் கண்டுபிடிப்பு மருத்துவத் துறைக்குப் பெரிதும் உதவின. நோயாளிகளுக்கு நோய்களைக் கணிக்கவும், எலும்பு முறிவுகளைப் பார்க்கவும், உடலில் உள்ள அயற்பொருள்களைக் கண்டறியவும் எக்ஸ்-ரே உதவின.

ராண்ட்ஜெனின் இந்த அற்புத கண்டுபிடிப்புக்காக 1901ல் இயற்பியலுக்கான முதல் நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது!

மருத்துவ மேதைகள் :

'உலகின் உளவியல் பகுப்பாய்வின் தந்தை' என்று புகழப்படும் டாக்டர் 'சிக்மண்ட் ஃபிராய்டு' 20ஆம் நூற்றாண்டுப் பேரறிஞர்களுள் ஒருவர். இவர் ஆஸ்திரியாவில் 1856ஆம் ஆண்டு மே 6ஆம் நாள் 'ஃபிரிபெர்க்' எனும் ஊரில் ஒரு துணி வியாபாரியின் மகனாகப் பிறந்தார். வியன்னா பல்கலைக் கழகத்தில் நரம்பியல் நிபுணராகப் பயின்றபின், 1885ல் பாரிஸுக்குச் சென்று உளவியல் தொடர்பாக ஆராய்ச்சி செய்தார். பில்லி, சூனியம் முதலியவற்றால்தான் மனநோய்கள் ஏற்படுகின்றன என்று தவறாக எண்ணியிருந்த சமயத்தில், ''மனநோய் என்பது உடலியல், உளவியல், சமூகவியல் போன்ற காரணங்களால் தோன்றுகின்றது'' என்று நிரூபித்தார். மனம் என்பது வெளிமனம், ஆழ்மனம், நடுமனம் என்று மூன்று நிலைகளை உடையது என்றும், மனிதனின் செயல்களைக் கட்டுப்படுத்துவதும் எண்ணங்களை ஒழுங்குபடுத்துவதும் வெளிமனத்தின் வேலை எனவும், மனிதனின் இயல்பான உணர்வுகளும் நிறைவேறாத ஆசைகளும் அடக்கி வைக்கப்படும் இடம் ஆழ்மனம் எனவும், வெளிமனத்தையும் ஆழ்மனத்தையும் இணைப்பது நடுமனம் எனவும் இவர்தான் விளக்கினார். ''ஆழ்மன ஆசைகளின் வெளிப்பாடுகளே கனவுகள்'' என்று கனவு உருவாகும் செயல்பாட்டை முதலில் பகுப்பாய்வு செய்தவர் இவரே! இன்றைக்கும் மனிதனைப் பெரிய அளவில் பாதிக்கின்ற 'ஹிஸ்டீரியா' எனும் மனநோயானது உடல்கோளாறு ஏதுமின்றி, உளவியல் கோளாறினால் மட்டுமே ஏற்படுகிறது என்பதை அப்போதே தெளிவாகச் சொன்னவர் ஃபிராய்டு ஒருவரே!



டாக்டர் சிக்மண்ட் ஃபிராய்டு

கடித மாலை

காய்கறிகள் மூலமாக ஒற்றுமையைச் சித்திரித்த 'நான்தான் ராஜா' குட்டிக்கதை அருமை!

- ஆர்.ஜி.காயத்ரி, திசையன்விளை.

பத்திரிகை மாணவ - மாணவிகளின் கோகுலம் தயாரிப்பு ஒவ்வொரு தகவலும் படிக்கப் படிக்க மிக நன்று!

- எம்.சிவரஞ்சனி, ஸ்ரீ மகாதேவ குருஜி மெட்ரிக்குலேஷன் மே.நி. பள்ளி, வலங்கைமான்.

இந்த இதழை, அக்கா, அண்ணன்கள் தயாரித்தார்கள் என்பதைப் படித்த போது, எனக்கும் ஆசையாக இருந்தது. நானும் இவர்களைப் போல் வளர்ந்ததும், என்னுடைய பங்களிப்பாக இதழைத் தயாரிப்பேன்!

- பி.சர்வேஸ்வரன், மூன்றாம் வகுப்பு, ஜீவனா பள்ளி, பொன்மேனி.

இறையன்பு அவர்களிடம் எடுத்திருக்கும் பேட்டி நன்று. கோகுலத்துக்குப் பாராட்டு மாலை சூட்டலாம்!

- மா.கோவிந்தசாமி, கத்தப்பாடி

'வேதாரண்யம் விளக்கு அழகு, திருவாரூர் தேர் அழகு' என்பது பழமொழி. திருவாரூர் ஆழித்தேர் பற்றிய செய்தி மிகவும் அற்புதம்!

- வீ.பூவரசன், மூன்றாம் நிலை, ஞானாம்பிகா உதவி தொடக்கப் பள்ளி, கருப்பம்புலம்.

முந்திரிக் காட்டுக்கும், சந்தனக் காட்டுக்கும் 'கோகுலம்' மைதானத்தில் நடந்த கிரிக்கெட் அருமை!

-ச.ஆ.கேசவன், இனாம் மணியாச்சி

எனது மகள் ஸ்ருதியின் சாதனையை வெளியிட்டமைக்கு நன்றி! தாங்கள் அளிக்கும் சான்றிதழைப் பெற நாங்கள் நேரில் வர வேண்டுமா?

- அனிதா ரவிசந்திரன், குத்தாலம்

(ஓரிரு மாதங்களில் நாங்களே தபால் மூலம் அனுப்புவோம். தாங்கள் வர வேண்டியதில்லை! - ஆர்)

நானும் தயாரிப்பேன்!

படம் : ஸ்ரீஹரி



வேம்பு சொன்ன நன்றி!

கதை : எஸ். ஜூலியட் மரியசெல்வி
படம் : பிள்ளை





மறுநாள் பள்ளி முடிந்து வீடு வந்தாள் கிருத்திகா.
அம்மா, இன்னைக்கு அறிவியல் மன்றம் நடந்தது. ஓர் அறிவியல் அறிஞர்தான் சிறப்புரையாற்றினார்.
முதல்ல கை, கால், கழுவிட்டு டிரஸ் மாத்து, சாப்பிட்டுக்கிட்டே பேசலாம்.
கிருத்திகா ஓடிபோய் முகம் கழுவி, உடைமாற்றி வந்தாள்.
அம்மா, நம்ம பூமி இப்போ வெப்பத்துல சூடாகிக்கிட்டே வருதாம்...
வாகனங்கள் வெளிப்படுத்தற புகையால வளிமண்டலம் நச்சுக்காற்றா மாறிடுச்சாம்.
அப்படியா!
கிருத்திகா வீட்டுக்கு பின்புறம் பார்த்தாள். அங்கே -
யாரும்மா நாலஞ்சு பேர் வந்திருக்காங்க. என்ன பண்றாங்க?
அங்கே வேலை நடக்குது. நந்தினியும், வைஷனியும் வந்தாச்சு. இன்னைக்கு வேற எங்கேயாவது போய் விளையாடுங்க!
தோட்டத்தில் இருப்பவர்களையே பார்த்துக்கொண்டிருந்த கிருத்திகா அதிர்ந்தாள்.
அப்பா! இங்கே வாங்க!
என்னாச்சு கிருத்திகா?


அப்பா அந்த வேப்ப மரத்தை ஏம்பா வெட்ட றாங்க?
கார்ஷெட் கட்ட இடம் வேணுமே, வேப்ப மரத்தை வெட்டினால்தான் இடம் கிடைக்கும்.
அப்பா அந்த மரத்துல நிறைய பறவைகள் தங்குமேப்பா. மரம் இல்லாட்டி அதுங்க பாவம் எங்கே போகும்? சுற்றுச் சுழலும் பாதிக்குமே!
சுற்றுச்சூழலைப் பாதுகாப்பேன்னு வரிசையில் நின்னு உறுதிமொழி சொன்னேனே. வேண்டாம்பா. மரம் பாவம்பா, அதை வெட்டினா எவ்ளோ வலிக்கும்?
சரி, சரி மரத்தை வெட்டல. கார் ஷெட்டை வேற இடத்துல போட்டுப்போம். கண்களைத் துடைச்சுக்கிட்டு, போய் விளையாடு!
கிருத்திகா மகிழ்ந்தாள். வேப்ப மரம் காற்றில் அசைந்து நன்றி சொன்னது.



விமர்சனம்



துணிச்சல்கார தீரேந்திரன்

ஆசிரியர் : சுதாமூர்த்தி, தமிழில் : சுப்ர.பாலன். வெளியீடு : வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை-17. விலை ரூ.50/-

மந்திரம், புத்திசாலித்தனம், அறிவுரை என பல் சுவைகளில் இருபது கதைகள் கொண்ட தொகுப்பு. சிறுவர்களுக்கு நன்கு அறிமுகமான சுதாமூர்த்தியின் ஆங்கிலக் கதைகளைத் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார் சுப்ர.பாலன். படிக்க படிக்கத் திகட்டாத கதைகள்!

நன்னெறிக் கதைகள் 59

ஆசிரியர் : பேராசிரியர் எ.சோதி. வெளியீடு : நன்மொழிப் பதிப்பகம், 16, கங்கை வீதி, வசந்த் நகர், புதுச்சேரி. விலை : ரூ.20/-

எளிமையான இனிமையான கதைகள் வேண்டுமா? 'படியுங்கள் பேராசிரியர் எ.சோதியின் கதைகளை!' என்று சொல்லுமளவுக்குப் பெயர் பெற்றவர். இந்தத் தொகுப்பிலுள்ள கதைகளும் படித்ததும் 'பலே' போட வைக்கின்றன!

வாத்து இளவரசர்கள்

ஆசிரியர் : நிலா. வெளியீடு விகடன் பிரசுரம், 757, அண்ணாசாலை, சென்னை - 2. விலை ரூ.40/-

பல்வேறு நாடுகளில் உலாவரும் வாய்மொழிக் கதைகளான நாடோடிக் கதைகளை நமக்கு விருந்தாக்கியுள்ளார் கதாசிரியர் நிலா. பெரிய எழுத்துகளும், முழுப் பக்கப் படங்களும், உயர் அச்சுத்தாளும் புத்தகத்துக்கு மேலும் அழகு சேர்க்கின்றன!


படிச்சீங்களா?

குருநாதர் தேவநாதனைப் பார்த்ததும் வீரபத்ரனுக்கு உடம்பெல்லாம் நடுங்கிவிட்டது. ''வ...வணக்கம் குருவே'' என்றான்.

''மடையர்களே! என்ன காரியம் செய்துகொண்டிருக்கிறீர்கள்? எங்கே சூரபத்ரன்?'' என்று சிங்கம் போல் கர்ஜித்தார் தேவநாதன்.

வீரபத்ரன் நடந்ததைக் கூறினான்.

''உங்கள் விளையாட்டின் விபரீதங்களைப் பார்த்தீர்களா? திடீரென பனிப் பிரதேசமாக இந்த இடம் மாறியதால் இந்த மான்கள் குளிர் தாங்காமல் இறந்துவிட்டன. இதுபோல் நிறைய பறவைகள், பூச்சிகளை சில நொடிகளில் கொன்றுவிட்டீர்கள். நீ ஆற்றில் உருவாக்கிய நான்கு சுறாக்களால் என்ன விபரீதம் நடந்துள்ளதோ?




6

வாண்டுதாசன்

வீரா—சூரா

இப்படி ஓடிப்பிடித்து விளையாடுவதற்கா மந்திரம் கற்றீர்கள்?'' என்று சீறினார்.

வீரபத்ரனுக்கு நடந்த தவறு நன்றாகப் புரிந்தது. சற்றும் தயங்காமல் குருநாதரின் காலடியில் விழுந்தான். ''என்னை மன்னி



யுங்கள் குருவே! அறிவுகெட்டு இப்படிச் செய்துவிட்டேன். இதற்காக நீங்கள் என்ன தண்டனை அளித்தாலும் ஏற்கிறேன்'' என்றான்.

''சூரபத்ரன் எங்கே?'' என்றவர், தலையைத் திருப்பி சுற்றும் முற்றும் பார்த்தார்.

''சூரா! சூரா!'' என்று அழைத்தான் வீரபத்ரன். தேவநாதனும் அழைத்துப் பார்த்தார். சூரபத்ரன் வரவே இல்லை!

*

வீரபத்ரன் தமது இளமை காலத்து நினைவுகளிலிருந்து மீண்டார். அந்த மந்திரவாளை சில நொடிகள் பார்த்துவிட்டு முன்புபோல் எடுத்து வைத்தார். தமது அறைக்கு வந்து, படுத்துக்கொண்டார்.

குருநாதரின் கோபத்துக்குப் பயந்து சூரபத்ரன் எங்கோ போய்விட்டான். வீரபத்ரன் தமது தவறுக்கு வருந்தியதால் அவரை மன்னித்த தேவநாதன், அவருக்கு மேலும் சில வித்தைகளைக் கற்றுக்கொடுத்து, மந்திரவாளையும் பரிசாக அளித்தார்.

பல ஆண்டுகளுக்குப் பின் நோயுற்று இறக்கும் நிலையிலிருந்த தேவநாதன், வீரபத்ரனை அழைத்தார். ''வீரா! என் பெயரைக் காப்பாற்றும் விதமாக நீ சிறந்து விளங்குவது மகிழ்ச்சி அளிக்கிறது. உன்னிடம் ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டும்'' என்றார்.

''சொல்லுங்கள் குருவே'' என்றார் வீரபத்ரன்.

''சூரபத்ரன் இப்போது எங்கே இருக்கிறான் தெரியுமா?''

''தெரியாது குருவே! அந்த விபரீத சம்பவத்துக்குப் பிறகு அவனைப் பார்க்கவே இல்லை'' என்றார்.

''அவன் வழிமாறிச் சென்றுவிட்டான். கற்ற மந்திர வித்தைகளைக் கொண்டு தீய சக்திகளுடன் நட்பை ஏற்படுத்தி எப்படியெல்லாமோ சென்றுவிட்டான். இப்போது அவனது நோக்கம் உன்னிடமுள்ள மந்திரவாளை அபகரிப்பதே. அது மட்டும் அவனது கைக்குச் சென்றால்,

பல விபரீதங்கள் நடக்கும். அதனால் ஜாக்கிரதையாக இரு. அதோடு, இன்னொரு முக்கியமான விஷயம்...'' என்ற தேவநாதன், ஒரு ரகசியத்தைச் சொன்னார்.

வீரபத்ரன் கவனத்துடன் கேட்டுக் கொண்டார். ''அப்படியே ஆகட்டும் குருவே!'' என்று வாக்குறுதியும் அளித்தார்.

'குருநாதருக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் காலம் வந்துவிட்டது. சூரபத்ரனின் தொல்லையும் அதிகமாகிவிட்டது. இனியும் அவனை விட்டு வைப்பது சரியல்ல. விடியட்டும்'' என்று எண்ணியவாறே உறங்கினார்.



மறுநாள்.

தங்கமுகிலன், கேசவன் உட்பட அனைத்து மாணவர்களும் தங்களின் வழக்கமான கடமைகளை முடித்தார்கள். சுள்ளியெடுக்க, பழங்கள் பறிக்க... என ஒவ்வொருவரும் கிளம்பினர்.

''முகிலா... கேசவா! இருவரும் உள்ளே வாருங்கள். உங்களுடன் பேச வேண்டும்'' என்றார் வீரபத்ரன்.

மூவரும் பூஜையறைக்குள் சென்று அமர்ந்தனர். ''முகிலா... மாணிக்கம் சூரபத்ரனைச் சந்தித்ததையோ, சூரபத்ரன் உங்களைத் துரத்தியதையோ நீங்கள் யாரிடமும் சொல்லவில்லைதானே?'' என்று கேட்டார்.

''இல்லை குருவே'' என்றான் முகிலன்.

''அந்த சூரபத்ரன் யார் என்று கேட்டீர்களல்லவா? சொல்கிறேன்! இப்போது நான் சொல்லப் போகும் விஷயங்கள் ரகசியமானவை. யாருக்கும் தெரியக் கூடாது'' என்றார்.

''சொல்லமாட்டோம் குருவே!''

வீரபத்ரன் நடந்த விஷயங்களைக் கூறினார். பிறகு ''அந்த சூரபத்ரன் பல தீய சக்திகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு சில தீயசக்திகளைப் பெற்றுள்ளான். அதனால் அவனை சுலபத்தில் அழிக்க முடியாது. அவனை அழிப்பதற்கு, ஒரு கூட்டு சக்தி தேவை, என்று எனது குருநாதர் சொன்னார்'' என்றார்.

''கூட்டு சக்தி என்றால்?''

''மூன்று வெவ்வேறு நட்சத்திரங்களில் உதித்தவர்கள் உன்னிடம் குறிப்பிட்ட காலத்தில் வருவார்கள். அவர்கள் மூலம் சூரபத்ரனை அழிக்க வேண்டுமென்றார் குருநாதர். அவர் குறிப்பிட்ட காலம் இப்போதுதான்.''

''அந்த மூவர் யார்?'' என்று ஆவலுடன் கேட்டான் கேசவன்.

வீரபத்ரன் புன்னகைத்தார். ''ஒருவன் நீ. இன்னொருவன் முகிலன்.''

இருவரும் சில நொடிகள் திகைத்தார்கள். 'குருநாதர் நிஜமாகச் சொல்கிறாரா? அல்லது விளையாடுகிறாரா?' என்ற சந்தேகம் எழுந்தது.

''என்ன அமைதியாகிவிட்டீர்கள்?'' என்று கேட்டார் வீரபத்ரன்.

''குருவே! சூரபத்ரனை அழிக்கப் போவது

"இது என்ன விநோதம் என்றே புரியவில்லையே! நேற்று இரவு வரை அரசர் நன்றாகத்தான் இருந்தார். திடீரென இந்தக் கொப்புளங்கள் எப்படி வந்தன?"



நாங்களா?'' என்று கேட்டான் முகிலன்.

''இதில் போய் விளையாடுவேனா? உங்களிடம் இவ்வளவு விஷயங்களையும் சொல்வதற்கு காரணமே இதுதான்'' என்றார்.

''சரி குருவே! அந்த மூன்றாவது நபர் யார்?'' என்று கேட்டான் முகிலன்.

''அதைச் சொன்னால் இன்னும் ஆச்சர்யப்படுவீர்கள். மாணிக்கம்!'' என்றார் வீரபத்ரன்.

அதே சமயம் நாட்டுக்குள் அரண்மனையில் ஒரு பெரிய விபரீதம் நடந்து கொண்டிருந்தது. தங்கமுகிலனின் தந்தையும் நாட்டின் அரசருமான பொன்முகிலன் கட்டிலில் கிடந்தார்.

அவரைச் சுற்றி அரண்மனை வைத்தியர்கள், ராணி, தளபதி, மந்திரி இருந்தனர். பொன்முகிலனின் உடம்பெல்லாம் கொப்புளங்கள்! வலியால் துடித்தார்.

''இது என்ன விநோதம் என்றே புரியவில்லையே! நேற்று இரவு வரை அரசர் நன்றாகத்தான் இருந்தார். திடீரென இந்தக் கொப்புளங்கள் எப்படி வந்தன? அவர் வலியால் துடிப்பதைப் பார்க்க சகிக்கவில்லை. ஏதாவது செய்யுங்கள்'' என்று கூறி அழுதார் ராணி.

''நாங்கள் முயற்சித்துக் கொண்டுதான் இருக்கிறோம். இது எந்த வகையான கொப்புளங்கள் என்றே புரியவில்லை'' என்றார் ஒரு வைத்தியர்.

அப்போது அரண்மனைக்கு வெளியே பூகம்பம் ஏற்பட்டதுபோல் பெரும் சத்தம் கேட்டது.

(தொடரும்)



இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி : 15.7.2008

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

விடையைச் சொல் ; பரிசை வெல் - 13

1. டோராவை மகிழ்விக்கும் இசைக் குழுவின் பெயர் ....

2. இந்தியாவின் முதல் பெண் முதலமைச்சர் ....

3. பச்சை வாழைப்பழத்தின் மருத்துவ குணம் ....

4. டாக்டர் சிக்மண்ட் ஃப்ராய்டு பிறந்த வருடம் ....

5. வேப்ப மரத்தைக் காப்பாற்றிய குட்டிப் பெண் பெயர் ....

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....


....

....

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


576


577


578


579


580


581


582


583


584


585


586



587


588


589


590


591



592


593


594



595


596


597


598


599


600

பெயர் மற்றும் விவரங்கள் 65 ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/06-08 · Licensed to pos
without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/06-08 · Registered as a Newspaper in Srilanka

